# இயங்கியற் பொருள் முதலியல்
## (Dialectical Materialism)

பேரா. வெ. தங்கவேல்சாமி

**தாமரைச் செல்வி பதிப்பகம்**
31/48, இராணி அண்ணா நகர்,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078.

# இயங்கியற் பொருள் முதலியல்
## (Dialectical Materialism)

SEELAN BOOKS ★ NORWAY ★
SIGNATURE

**பேரா. வெ. தங்கவேல்சாமி**

**தாமரைச் செல்வி பதிப்பகம்**
31/48, இராணி அண்ணா நகர்,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078.

## நூல் விவரம்


| | |
|---|---|
| தலைப்பு | : இயங்கியற் பொருள் முதலியல் |
| ஆசிரியர் | : பேரா. வெ. தங்கவேல்சாமி |
| பதிப்பு | : முதல் பதிப்பு 1998 சனவரி |
| வெளியிட்டோர் | : தாமரைச் செல்வி பதிப்பகம்<br>31/48, இராணி அண்ணா நகர்,<br>சென்னை – 78. |
| கணினி அச்சு கோர்ப்பு | : குறிஞ்சி கிராபிக்ஸ்<br>321, கோடம்பாக்கம்,<br>சென்னை - 24. |
| அச்சிட்டோர் | : மணி பிரிண்டர்ஸ்,<br>சென்னை – 5 |

விலை ரூ. : 10/-

*மறைந்த பேராசிரியர்*

**இல. க. இரத்தினவேல்**

*நினைவாக*

# முன்னுரை

மார்க்ஸியத்தின் மூன்று அடிப்படைக் கூறுகளாக இயங்கியற் பொருள் முதலியல், வரலாற்றுப் பொருள் முதலியல், அரசியல் பொருளாதாரம் உள்ளன. இயற்கை, சமூகம், சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சிப் போக்கை நிர்ணயிக்கும் பொதுவிதிகள் அடங்கிய மார்க்ஸிய மெய்யியலான இயங்கியற் பொருள் முதலியல், அறிவியல் வளர்ச்சியில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. இயற்பியலில் ஆற்றல் மாறாக் கோட்பாடு, உயிரியலில் டார்வினின் பரிணாமக் கொள்கை மற்றும் உயிர்மத்தின் (Cell) கண்டுபிடிப்பு ஆகிய முப்பெரும் கண்டுபிடிப்புகள் இயங்கியற் பொருள் முதலியலின் உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. இடமும் (Space) காலமும் (time) பொருளுக்கு அப்பாற்பட்டவை. அவை முற்றுமையானவை (absolute) என்ற நியூட்டனின் கோட்பாட்டை இடமும், காலமும் பொருளிலிருந்து பிரிக்க முடியாதவை, அவை சார்புடையவை என்ற மார்க்ஸியக் கோட்பாடு மறுத்தது. 1905ல் கண்டுபிடிக்கப்பட்ட ஐன்ஸ்டினின் ஒப்புமைத் தத்துவம் நியூட்டனின் கோட்பாட்டை மறுத்து, இடமும் காலமும் பொருளிலிருந்து பிரிக்கப்பட முடியாதவை, சார்புடையவை என்ற மார்க்ஸியக் கோட்பாட்டை உறுதிப்படுத்தியது. இவ்வாறாக அறிவியல் வளர்ச்சியின் அடிப்படையிலமைந்த மார்க்ஸிய மெய்யியல் அறிவியல் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது.

அறிவியலோடு, உண்மையோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட மார்க்ஸிய மெய்யியல் தோற்றுவிட்டது என்ற பிரச்சாரம் பெருமளவில் உலகம் முழுமையும் செய்யப்படுகின்றது. மார்க்ஸியத்தை மறுத்து, திருத்தி, புரட்டி ஏராளமான நூல்கள், கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. வர்க்கப் போராட்டத்தை மறுத்து சாதி, மத, இனப்போராட்டங்கள் பெருமளவில் ஊக்குவிக்கப்படுவதற்கு தத்துவ அடிப்படையாக மேற்கண்ட நூல்கள், கட்டுரைகள் அமைகின்றன.

சோவியத் யூனியனில் அதிகாரத்துவ முதலாளியம் மேலும் மேலும் வளர்ந்து வல்லரசுப் போட்டியில் சோவியத் பொருளாதாரம் இராணுவமயமாகி தேக்கமுற்று நெருக்கடிக்குள்ளாகி சோவியத் யூனியன் மற்றும் அதைச் சார்ந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் நொருங்கி, சிதறி முதலாளிய மீட்சி ஏற்பட்டதும், சீனா, வியட்நாம் போன்ற நாடுகளில் ஏற்பட்ட முதலாளிய மீட்சியும் சோசலிசத்தின் தோல்விக்கும், மார்க்ஸியத்தின் தோல்விக்கும் எடுத்துக்காட்டாக முன்வைக்கப்படுகின்றது. "ஒன்றின் இருத்தல் மற்றொன்று இருத்தலுக்கு நிபந்தனையாகி ஒரு பொருளில் சகவாழ்வு நடத்தும் இரு எதிர்மறைக் கூறுகளில் ஒன்று மற்றொன்றாக ஒன்றின் இடத்திற்கு மற்றொன்று

சில குறிப்பிட்ட சூழல்களில் மாறும்" என்று மாவோ முரண்பட்ட கூறுகளின் ஒத்ததன்மை (identity) பற்றி விளக்குகின்றார். சோசலிசப் புரட்சிக்குப்பின் முதலாளி வர்க்கம் ஆளப்படும் வர்க்கமாக மாறுமே தவிர முற்றாக ஒழிந்துவிடுவதில்லை. சோசலிசப் புரட்சிக்குப் பின்பும் தொடர்ச்சியான வர்க்கப் போராட்டங்கள் மூலம் வர்க்கங்கள் ஒழிந்து சோசலிசம் உறுதிப்பட்டு இயற்கைக்கும் மனிதனுக்குமான புதிய முரண்பாடு தோன்றும்வரை, வாய்ப்பான சூழலில் கூறுகளின் இடமாற்றத்திற்கு, முதலாளிய மீட்சிக்கு வாய்ப்புண்டு. இது மார்க்ஸிய மெய்யியல் விதிகளுக்கு உடன்பட்டதே தவிர மார்க்ஸியத்தை மறுப்பதல்ல. சுழலேணி முறையில் ஏற்படும் சமூகவளர்ச்சி பற்றிய மார்க்ஸிய கோட்பாடும் தற்காலிகப் பின்னடைவுகளை மறுப்பதில்லை. மக்களை, நாடுகளைச் சுரண்டுவதில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ள முதலாளியம், மற்றும் ஏகாதிபத்தியத்தால் செல்வங்கள் குவியமாதலையும், பெரும்பகுதி மக்கள் வறுமைக்குள்ளாவதையும் தவிர்க்கவியலாது. தனக்கெதிரான வர்க்கப் போராட்டங்களை, மக்கள் போராட்டங்களை அறிவியல் தொலை தொடர்பு வளர்ச்சியையும், ஏராளமான நிதியையும் பயன்படுத்தி தன்னுடைய அடிவருடிகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலம் தற்காலிக சிதைவுக்கும் பின்னடைவுக்கு முள்ளாக்க முடியுமே தவிர தவிர்க்கவியலாது. தோல்வியி லிருந்து பாடம் கற்று, மக்கள் போராட்டங்கள் மக்களை, நாடுகளை விடுதலை செய்யும். சமூகம் வளர்ச்சி பெறும். இதுதான் சமூக வளர்ச்சிப் போக்கின் விதி.

உலக வங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்ற உலக நிதி நிறுவனங்கள், உலக வர்த்தக நிறுவனம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் அடங்கிய ஏகாதிபத்திய கட்டமைவு உலகப் பொருளாதாரத்தை கட்டுப்படுத்தும் இன்றைய சூழல், லெனின் காலத்திய ஏகாதிபத்திய சூழலிலிருந்து வேறுபட்டதுதான். எனவே ஏகாதிபத்தியம் பற்றிய லெனினியக் கோட்பாடுகள் காலாவதியாகிவிட்டன என்று அர்த்தமல்ல. ஏகாதிபத்தியம் வளர்ச்சி பெறாத காலத்திய மார்க்ஸியக் கோட்பாடு அடிப்படையில்தான், ஏகாதிபத்தியம் பற்றிய லெனினியக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. இன்றைய சூழலுக் கேற்றவாறு மார்க்ஸிய லெனினிய அடிப்படையில் ஏகாதிபத்தியம் பற்றிய கோட்பாடுகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது அவசியம். சூழல் மாறியதைக் காரணம் காட்டி, மார்க்ஸிய லெனினிய அடிப்படைகளை மறுத்து, ஏகாதிபத்தியச் சுரண்டல் தவிர்க்கவியலாதது என்று மார்க்ஸியத்தைப் புரட்டுவது ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்வது ஆகும்.

மிகுதியான மூலதனத்தையும், வளர்ச்சி மிகுந்த தொழில் நுட்பத்தையும் தன்னகத்தே கொண்ட பன்னாட்டு நிறுவனங்கள், மற்றும் இந்நிறுவனங்களில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளான வடகோள நாடுகள் ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளான தென்கோள நாடுகளைப் பொருளாதார ரீதியாக மட்டும் கட்டுப்படுத்தவில்லை. கருத்தியல் தளத்திலும் இவர்களுடைய கருத்தியல்தான் ஆதிக்கநிலையில்

உள்ளது. மார்க்ஸியம், லெனினியம் பேசும் கட்சிகள், குழுக்கள் கூட மார்க்ஸியம் பேசிக்கொண்டே ஏதாவது ஒரு நிலையில் இவர்களுக்குச் சேவகம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இச்சூழலில் இயல்பாகவே அடிப்படை மார்க்ஸிய-லெனினியக் கல்வி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

முதன்மையான காலனி ஆதிக்க நாடுகளான ஐரோப்பிய நாடுகள் தங்கள் எல்லைகளை உதறித் தள்ளி, ஒரே நாணயத்தை ஏற்று, "ஐரோப்பிய ஒன்றியம்" உருவாவதை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றது. ஏகாதிபத்தியக் கட்டமைவு, நாட்டு எல்லைகளைக் கடந்து ஒன்றிணைந்து "உலகமயமாதல்" முழக்கத்துடன் தென்கோள நாட்டுத் தரகர்கள் மற்றும் அடிவருடி அரசுகளைப் பயன்படுத்தி கொள்ளையடிக்கும் நவகாலனியச் சூழலில் உலக முழுமையுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின், நாடுகளின் விடுதலைப் போராட்டங்கள் ஒன்றிணைக்கப்படுவது அவசியமாகின்றது. "பாட்டாளிவர்க்க சர்வதேசியம்" மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. விடுதலைக்குப்பின் பொருளாதாரச் சுயசார்பு உத்திரவாதப்படுத்தப்படும் போதுதான் சாதி, மத வேறுபாடுகள் குறைந்து மறையும். மொழி, இனம், பண்பாடு பாதுகாக்கப்பட்டு வளர்ச்சியடையும். இச்சூழலில் வர்க்கப் போராட்டத்தை மறுத்து, சாதி, மத வேறுபாடுகளை முன்னிருத்தி அவற்றை மறுகட்டமைவு செய்ய நடத்தப்படும் இயக்கங்கள், போராட்டங்கள் ஆய்வு செய்யப்படவேண்டும். எதிரி ஒடுக்கப்பட்ட நாட்டு மக்கள் கருத்தினுள்ளும், இயக்கங்களிலும் புகுந்துவிட்ட சூழ்நிலையில் சமூகவளர்ச்சி பற்றி விதிகளைத் தெளிவாகத் தெரிந்து செயல்பட வேண்டிய மிகுதியான தேவை உள்ளது. முதலாளிய மீட்சிக்குள்ளான 'சோசலிச' நாடுகள் இனி இந்தத் தேவையை நிறைவேற்றாது. மார்க்ஸ்-ஏங்கல்ஸ் உருவாக்கிய இயங்கியற் பொருள் முதலியலை லெனின், மாவோ மேலும் செழுமைப்படுத்திய கருத்துக்களைத் தொகுத்து இச்சிறு நூல் வெளியிடப்படுகின்றது. இயங்கியலின் சாரத்தை சுருக்கமாகக் கொடுக்கும் முயற்சியில், இது எதிர்க் கருத்துக்களுடன் போராடி வளர்ந்த வரலாறு தவிர்க்கப் பட்டுள்ளது. இச்சிறு தொகுப்பு உருவாக்கத் தூண்டி ஆழமாக விவாதித்து செழுமைப்படுத்திய தோழர்கள் அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூலை வெளியிட்டு உதவிய பதிப்பகத்தாருக்கும் நன்றி.

மதுரை,
8 . 12 . 97.

ஆசிரியர்

# இயங்கியற் பொருள் முதலியல்

## அறிவியல் ( விஞ்ஞானம் - Science ) என்றால் என்ன ?

நடைமுறையில் சோதிக்கப்பட்ட உண்மைகளைக் கொண்டதே அறிவியல். இந்த உண்மைகளின் அடிப்படையில் மேலும் நடைமுறைக்குச் சென்று புதிய உண்மைகளைக் கண்டுபிடித்து அறிவியல் மீண்டும் வளம் பெறுகிறது, வளர்ச்சி பெறுகிறது. இயற்கை ஒவ்வொரு நொடியும் மாறிக்கொண்டு இருக்கின்றது. அது தொடர்ந்து மாறிக் கொண்டேயிருக்கும். இந்த மாற்றம் நமது அகநிலை விருப்பத்தைப் பொறுத்ததல்ல. புறவயமாக நிகழ்கின்றது. இந்த மாற்றம், வளர்ச்சிக்குக் காரணமான விதிகளை அறிவது அறிவியல். இதை அறிவதன் நோக்கம் இயற்கையையும், அதன் நிகழ்வுகளையும் தெரிந்து கொள்வதற்கு மட்டுமல்ல; இயற்கையை நமக்கு உதவும் வகையில் மாற்றியமைப்பதற்கே. பொருள் உற்பத்தி நடவடிக்கையில்தான் அறிவியல் வளர்கின்றது.

## அறிவியலும் மெய்யியலும்
## ( விஞ்ஞானமும் தத்துவமும் - Science and Philosophy )

இயற்பியல் (பௌதிகம் - Physics), வேதியியல் (இரசாயனம் - Chemistry) உயிரியல் ( Biology ), வானவியல் ( Astronomy ) மற்றும் அறிவியலின் ஒவ்வொரு பிரிவும் இயற்கையின் ஏதாவது ஒரு பகுதியை நிர்ணயிக்கின்ற விதிகளைப் பற்றி அறிகின்றது. ஆனால் மெய்யியல் உலகம் முழுமையும் நிர்ணயிக்கின்ற பொது விதிகளை அறிகிறது. எனவேதான் மெய்யியலை இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சியை நிர்ணயிக்கின்ற பொதுவிதிகளைக் கொண்ட அறிவியல் என்று கூறுகிறோம். எனவே மெய்யியல் மற்ற அறிவியல்களைப் புறக்கணிக்க முடியாது. அதுபோல் அறிவியலும் மெய்யியலைப் புறக்கணிக்க முடியாது. மற்ற அறிவியல்களின் சாதனைகளில் மெய்யியல் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதன் மூலம்தான் அது வளரமுடியும். முற்போக்கான உலகக் கண்ணோட்டத்தை உருவாக்க முடியும். மார்க்ஸிய - லெனினிய மெய்யியல்தான் அப்படிப்பட்ட மெய்யியல், மார்க்ஸிய லெனினிய மெய்யியல் மற்ற அறிவியல்களுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. நவீன அறிவியல் சாதனைகளின் அடிப்படையிலமைந்த மார்க்ஸிய லெனினிய மெய்யியல் மனிதனுக்கு இயற்கையைப் பற்றிய அறிவை மேலும் மேலும் பெற்றுத்தரும் வகையில் அறிவியலுக்கு முன்னேறிய உலகப்பார்வையையும், புரியும் முறையையும் அறிந்து அதனை வளப்படுத்துகின்றது.

## வேறுபட்ட உலகக் கண்ணோட்டங்கள்

வேறுபட்ட மக்கள், வேறுபட்ட உலகக் கண்ணோட்டங் களைக் கொண்டிருக்க முடியும். பொதுவாக ஒரு மனிதன் சமூகத்தில் தான் வகிக்கும் இடத்தைப் பொறுத்து அவனுடைய உலகக் கண்ணோட்டம் அமையும். வர்க்க சமுதாயத்தில் வர்க்கப் போராட்டங்கள் நிகழ்கின்றன. அப்படிப்பட்ட சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட வர்க்கத்திற்கும் ஒடுக்கும் வர்க்கத்திற்கும் பொதுவான உலகப்பார்வை, மெய்யியல் இருக்கமுடியாது. மாறுபட்ட எதிரெதிரான வர்க்கங்களை நியாயப்படுத்த, பாதுகாக்க மாறுபட்ட எதிரெதிரான மெய்யியல்கள் உண்டு. ஏகாதிபத்தியத்தையும், காலனியாதிக்கத்தையும் எதிர்த்துப் போராடுகிறவர்களுக்கும், ஏகாதிபத்தியக் காலனியாதிக்ககாரர்களுக்கும் சுதந்திரத்தைப் பற்றியும் மனித சமுதாய மகிழ்ச்சியைப் பற்றியும் ஒரே கண்ணோட்டம் இருக்கவியலாது.

எனவேதான் வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் இருபிரிவினருக்கிடையே மெய்யியல் கருத்துப் போராட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன. அப்படிப்பட்ட இருபிரிவினர்தான் கருத்து முதலியலார்களும் (idealists - கருத்து முதல்வாதிகள்), பொருள்முதலியலார்களும் (Materialists - பொருள் முதல்வாதிகள்) ஆவர். இவர்களைப் பற்றிப் பார்க்குமுன் பருப்பொருள் (matter) என்றால் என்ன? கருத்து (consciousness) என்றால் என்ன? என்று பார்ப்போம்.

## பருப்பொருள் என்றால் என்ன?

நம்மைச் சுற்றியுள்ள புறஉலகில், கல், மண், மரம் போன்ற பல இயற்கைப் பொருட்களைப் பார்க்கின்றோம். இடி, மின்னல், மழை போன்ற பல இயற்கை நிகழ்வுகளைக் காண்கிறோம். இவற்றை நாம் பருப்பொருள் என்று பொதுவாகக் கூறுகிறோம். இப்பருப்பொருளில் அடங்கியுள்ள உட்சாரமும் (essence) பொதுத்தன்மையும் (General property) என்ன?

(1) பருப்பொருட்கள் நமக்குப் புறவயமாக நிலவுகின்றன Matter exists objectively). அதாவது நமது சிந்தனைக்குப் புறம்பாக மனிதனைச் சாராமல் அவை நிலவுகின்றன. உதாரணமாக ஒரு மரத்தை எடுத்துக் கொள்வோமானால் நாம் இருப்பதாலோ, அல்லது மரம் இருக்கின்றது என்று சிந்திப்பதாலோ அது இருப்பதில்லை. நாம் சிந்திக்காவிட்டால் அது இல்லாமல் போய்விடாது.

(2) புறவுலகப் பருப்பொருட்கள் நமது புலன்களைப் பாதித்து தாம் எவை என்பதை நமக்கு உணர்த்துகின்றன. உதாரணமாக மரத்தைத் தொட்டு அல்லது கண்ணால் பார்த்து உணர்கின்றோம். இடியை காதால் கேட்டு உணர்கின்றோம். காற்று உடல்மீது படுவதால் உணர்கின்றோம்.

(3) இயக்கம் (Motion) இல்லாமல் பருப்பொருள் இல்லை. இயக்கம் என்பது பருப்பொருளிலிருந்து பிரிக்கமுடியாத ஒருதன்மை. இயக்கம்

பருப்பொருள் இருத்தலின் ஒரு வடிவம் ஆகும். உதாரணமாக கீழே கிடக்கின்ற ஒரு கல்லை எடுத்துக் கொள்வோம். அது இயக்கமின்றி இருப்பதாகத் தோன்றினாலும் அதனுள் மூலக்கூறுகள் (molecules) அணுக்கள் (atoms) எலக்ட்ரான்கள் (electrons) இடையறாது இயங்கிக் கொண்டிருக்கின்றன. கல் பூமியோடு சூரியனைச் சுற்றிக் கொண்டும் இருக்கின்றது. ஈரம், வெயில், காற்று அதன் மீது பட்டு கல்லில் உண்டாகும் சிதைவும் ஒருவகை இயக்கமே. நாம் அசையாது இருந்தாலும் உடலில் இரத்த ஓட்டம் இடையறாது நிகழ்கின்றது. உயிர்மங்கள் (cells - உயிரணுக்கள்) அழிவதும் புதிதாகத் தோன்றுவதும் உடலில் இடையராது நிகழ்கின்றது. இதுவும் ஒருவகை இயக்கமே. பொருளில் அடங்கியுள்ள மூலக்கூறுகளின் இயக்கமே வெப்பம். எலக்ட்ரான்களின் இயக்கமே மின்னோட்டம். அயனிகளின் (ions) இயக்கமே வேதியியல் மாற்றங்கள்.

(4) இடத்தையும் (Space) காலத்தையும் (time) ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. பொருளைப் போலவே இடமும் காலமும் புறவயமாக நிலவுகின்றன என்ற கருத்து மார்க்ஸ் ஏங்கல்ஸ் மெய்யியலில் இடம் பெற்றிருந்தது. ஆனால் "இடமும் காலமும் பொருளுக்கு அப்பாற்பட்டவை" என்ற மார்க்ஸியத்துக்கு முரணான நியூட்டனின் கருத்தும், இடம் முற்றுமையானது (absolute - சார்பிலாதது), காலம் முற்றுமையானது (absolute - சார்பிலாதது) என்ற நியூட்டனின் கருத்தும், இயற்கை அறிவியலில் 20ஆம் நூற்றாண்டு ஆரம்பம் வரை இடம் பெற்றிருந்தது. ஐன்ஸ்டினின் சார்பியல் தத்துவம் (Theory of relativity) இடத்திற்குரிய நீளம், அகலம், உயரம் (x, y, z) என்ற மூன்று பரிமாணங்களுடன் (Dimentions) காலத்தையும் (t) நான்காவது பரிமாணமாகக் கொண்டு பொருளை அறிய வேண்டும் என்று கூறுகின்றது. அதாவது இடத்தை காலத்திலிருந்து பிரிக்கமுடியாது. பொருளை இடத்திலிருந்தும் காலத்திலிருந்தும் பிரிக்கமுடியாது என்ற மார்க்ஸிய தத்துவக் கோட்பாட்டை நிரூபிக்கின்றது. நியூட்டனின் கருத்தை மறுக்கிறது. மேலும் இடம் (ஆகாயத்தில் இரு புள்ளிகளுக்கு இடையிலுள்ள தூரம்) காலம் (மின்னல் போன்ற நிகழ்வுக்கு எடுத்துக் கொள்ளும் நேரம்) பூமியிலிருந்து கணக்கிடும் போதும் அல்லது அதிக வேகத்தில் செல்லும்வேறு ஒரு இயற்கை அல்லது செயற்கை கோளிலிருந்து (Satellite) கணக்கிடும்போதும் மாறுபட்டு இருக்கும். இடமும் காலமும் எங்கிருந்து கணக்கிடப்படுகின்றதோ, அந்த ஊர்தியின் வேகத்தைப் பொறுத்து மாறுபவை என்று கூறுகின்றது. இடமும் காலமும் முற்றுமையானது (சார்பில்லாதது) என்ற நியூட்டனின் கருத்தை மறுக்கின்றது.

எனவே பருப்பொருள் (1) புறவயமானது (2) புலன்களைப் பாதித்துத் தம்மை உணர்த்துகின்றது (3) பருப்பொருளை இயக்கத்திலிருந்து பிரிக்க முடியாது (4) இடத்திலிருந்தும் காலத்திலிருந்தும் பிரிக்கமுடியாது.

## மெய்யியலில் கூறப்படும் பருப்பொருள்

மெய்யியலில் கூறப்படும் பருப்பொருளில் இயற்கை அறிவியலில் கூறப்படுகின்ற திட, திரவ, வாயுக்களைப் பொருட்கள், சமூக உறவுகள், அமைப்புக்களும் அடங்கும். இவை திட, திரவ, வாயுக்களைப் போல் நிறை, பருமன் போன்ற பண்புகள் பெறாமல் இருந்தும் பருப்பொருளுக்குரிய மேற்கூறப்பட்ட நான்கு பண்புகளைப் பெற்றுள்ளன.

உதாரணமாக முதலாளி - தொழிலாளி என்ற சமூக உறவை எடுத்துக் கொள்வோம். இதனை நிறுத்துப்பார்க்க முடியாது. ஆனால் அந்தப் பண்பு முதலாளியின் அல்லது தொழிலாளியின் சிந்தனையைப் பொறுத்தல்ல. சமூக அமைப்பைப் பொறுத்தது. தொழிலாளி அப்படி உறவு கிடையாது என்று நினைத்தவுடன் அந்த உறவு இல்லாமல் போய்விடாது; வர்க்க சமுதாய அமைப்பு மாறும்போதுதான் அவை இல்லாமல் போகும். எனவே அந்த உறவு (1) மனிதனின் சிந்தனைக்குப் புறவயமாக நிலவுகின்றது. (2) மேலும் இவ்வுறவை முதலாளி, தொழிலாளி இருவராலும் உணரமுடிகிறது. (3) இந்த உறவு நிலையானதல்ல, இயங்கக்கூடியது, மாறக்கூடியது. (4) ஒரு குறிப்பிட்ட இடத்தில் (நாட்டில்) காலத்தில் (period) தான் இவ்வுறவு நீடிக்கிறது. எனவே இதுவும் பருப்பொருள் தன்மை உடையதே.

## கருத்து (idea) என்றால் என்ன?

உலகில் பருப்பொருள் தன்மை உடையவை மட்டும் நிலவவில்லை. நமது சிந்தனைகள், எண்ணங்கள், விருப் பங்கள் முதலியனவற்றைப் பருப்பொருளில் சேர்க்கமுடியாது. அவை நம்மைச் சாராமல் புறவயமாக நிலவவில்லை. மாறாக அவை நம்மைச் சார்ந்துதான் உள்ளன. நாம் சிந்தித்தால்தான் சிந்தனை தோன்றும். விருப்பம் தோன்றும். இவை நம்மைச் சார்ந்து நிற்பதால் இவற்றைப் பருப்பொருள் என்றழைக்க முடியாது. இவ்வாறு நம்மைச் சார்ந்து நமக்கு அகவயமாக நிற்கின்ற இவற்றைப் பொதுவாக கருத்து (idea) அல்லது மனம் (mind) என்றழைக்கலாம். சிலர் இதைத்தான் ஆன்மா (spirit) என்றும், தன்னுணர்வு (consciousness) என்றும் அழைக்கின்றனர்.

கருத்து என்பது நமக்கு அகவபமாக நிற்பது என்று பார்த்தோம். இக்கருத்து எங்கிருந்து தோன்றுகிறது? அதன் உள்ளடக்கம் என்ன? உதாரணமாக "மரம்" என்ற ஒரு கருத்தை எடுத்துக் கொள்வோம். இக்கருத்து தெரிவிப்பது என்ன? நமக்கு வெளியே மரம் என்ற பருப்பொருள் ஒன்று இருக்கிறது என்பதை இது தெரியப்படுத்துகிறது. எவ்வாறு இக்கருத்து தோன்றியது? நமக்கு வெளியே உள்ள பருப்பொருளாகிய மரம் நமது கண்ணைப் பாதித்து நமது மூளையில் "மரம்" என்ற கருத்தை உருவாக்குகிறது. எனவே, கருத்து என்பது மனிதனுக்குப் புறவயமாக நிலவுகின்ற பருப்பொருட்களை, மனிதமூளை பிரதிபலிப்பது என்பதேயாகும். அதாவது கருத்து என்பது புறவய உலகைப் பற்றிய அகவயப் பிரதிபலிப்பேயாகும்.

## பொருள் முதலியலும் கருத்து முதலியலும் (பொருள் முதல்வாதமும்), கருத்து முதல்வாதமும்

பருப்பொருள், கருத்து ஆகிய இரண்டில் முதன்மையானது எது? பருப்பொருள்தான் கருத்து தோன்றுவதற்குக் காரணமா? எது எதற்கு அடிப்படை? இந்த வினாவிற்கு விடையளிப்பதில் மெய்யியலார்கள் (Philosophers - தத்துவவாதிகள்) இரு பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றனர்.

பருப்பொருள்தான் முதன்மையானது; அதுதான் அது பற்றிய கருத்து தோன்றுவதற்குக் காரணம்; அடிப்படை என்று கூறுபவர்கள் பொருள் முதலியலார்கள் (பொருள் முதல்வாதிகள்) என்றழைக்கப்படுகின்றனர்.

கருத்து தான் முதன்மையானது; அதுதான் அது கூறுகின்ற - வெளிப்படுத்துகின்ற பருப்பொருள் தோன்றுவதற்கு, நிலவுவதற்குக் காரணம் - அடிப்படை என்று கூறுபவர்கள் கருத்து முதலியலார்கள் (கருத்து முதல்வாதிகள்) என்றழைக்கப்படுகின்றனர்.

## கருத்து முதலியலின் (கருத்து முதல்வாதத்தின்) கொள்கை

கருத்து முதலியல் கூறுவதென்ன? இயற்கை உலகம் ஆகியன முதலில் நிலவவில்லை. அவை பற்றிய சிந்தனையே அல்லது கருத்தே முதலில் நிலவியது; இச்சிந்தனையின், கருத்தின் - படைப்பே அல்லது விளைபொருளே இயற்கை, உலகம் ஆகிய பருப்பொருள்களாகும்.

உலகம் தோன்றுவதற்கு அடிப்படையே ஒரு முற்றுமையான கருத்தே (absolute idea) என்று கருத்து முதலியலார்கள் கூறுகின்றனர். இதனைச் சிலர் பரம்பொருள் (universal spirit) என்றும் அழைக்கின்றனர். இக்கருத்துக்கு - பரம்பொருளுக்கு - அடிப்படையாக எப்பருப்பொருளும் கிடையாது. அதாவது பிற கருத்துக்களைப்போல், ஏதோ ஒரு பருப்பொருளைப் பிரதிபலிப்பது அல்ல இது. உதாரணமாக "மரம்" என்ற கருத்து மரம் என்ற பருப்பொருளைக் குறிக்கின்றது. ஆனால் கருத்து முதல்வாதிகள் கூறுகின்ற முற்றுமையான கருத்து, பரம்பொருள் - எப்பருப்பொருளையும் குறித்து நிற்கவில்லை. அது தன்னுள்ளே பரிபூரணமான சுத்தமான கருத்தாகும். இவ்வாறுதான் கருத்து முதலியலார்கள் கூறுகின்றனர்.

இயற்கையில் உள்ள அனைத்துப் பருப்பொருட்களுக்கும் அவை பற்றிய கருத்துக்களே அடிப்படை. இக்கருத்துக்கள் நிலவுவதே அப்பருப்பொருட்கள் நிலவுவதற்கக் காரணம் - அடிப்படையாகும். இதுவே கருத்து முதலியலார்களின் கொள்கையாகும்.

## பொருள் முதலியலின் (பொருள் முதல்வாதத்தின்) கொள்கை

பொருள் முதலியலின் கொள்கைப்படி இயற்கையானது - படைக்கப்பட்ட ஒன்றல்ல; அது எப்போதும் நிலவி வருவது ஆகும். இயற்கையில் உள்ள பருப்பொருள்களில் ஏற்பட்ட மாற்றங்களில், வளர்ச்சிகளில் தோன்றியதுதான்

இவ்வுலகம் ஆகும். உலகமானது முதலில் உயிரற்ற பொருட்களையே கொண்டிருந்தது. பின்பு அப்பொருள்களில் ஏற்பட்ட வளர்ச்சியில் உயிருள்ள பொருள்கள் தோன்றின. அவ்வுயிருள்ள பொருட்களின் வளர்ச்சியில் தோன்றியவனே மனிதன். அம்மனிதன் தோன்றிய பிறகுதான் மனித சிந்தனை தோன்றியிருக்க முடியும். எனவே மனித சிந்தனை அல்லது கருத்து தோன்றுவதற்கு முன்பே பருப்பொருள் நிலவியுள்ளது. மேலும் சிந்தனை என்பதே நமது மூளையின் வெளியுலகில் நிலவுகின்ற பருப்பொருளைப் பற்றிய அகவயமான பிரதிபலிப்பாகும். எனவே சிந்தனை பருப்பொருளைச் சார்ந்ததே. இரண்டில் பருப்பொருளே முதன்மையானது, அடிப்படையானது.

## கருத்து முதலியலுக்கும் பொருள் முதலியலுக்கும் வேறுபாடுகள்

| கருத்து முதலியல் (கருத்துமுதல்வாதம்) | பொருள்முதலியல் (பொருள்முதல்வாதம்) |
|---|---|
| 1. முற்றுமையான கருத்தின் (absolute idea) பிரதிபிம்பமே இந்த உலகம். பரம்பொருளின் (universal spirit) உருவமே உலகம். கருத்து இருப்பதாலே இந்த உலகம் உள்ளது. | 1. உலகம் என்பது அதன் தன்மையிலேயே, இயல்பிலேயே ஒரு பொருளாக அமைந்துள்ளது. பொருளின் இயக்க விதிகளின்படி தான் உலகம் வளர்கிறது. அதன் வளர்ச்சிக்கு ஒரு "பரம்பொருள்" தேவையில்லை. |
| 2. கருத்து மட்டும்தான் உண்மையில் இருக்கின்றது. பௌதிக உலகம், வாழ்வு இயற்கை அனைத்தும் நமது கருத்தில் புலனுணர்வுகளில் மட்டுமேயிருக்கின்றன. | 2. பொருள், வாழ்வு, இயற்கை அனைத்தும் நமது கருத்தைச் சார்ந்திராமல் புறவயமாக நிலவுகின்றன. |
| 3. கருத்து முதன்மையானது; அது பொருள் தோன்றுவதற்கு அடிப்படை. | 3. பொருள் முதன்மையானது; அது கருத்து தோன்றுவதற்கு அடிப்படை. |
| 4. உலகத்தையும் அதன் விதிகளையும் தெரிந்து கொள்ளுதல் இயலாது. | 4. உலகத்தையும் அதன் விதிகளையும் முழுமையாகத் தெரிந்து கொள்ளமுடியும். |
| 5. உலகைப் பற்றிய நமது அறிவு நம்பத் தகுந்தல்ல. | 5. சோதனை மூலமாகவும், நடைமுறை மூலமாகவும் சோதிக்கப்பட்ட இயற்கை விதிகள் பற்றிய அறிவு நம்பத்தகுந்தது. |
| 6. புறவயமான உண்மையை (objective truth) அங்கீகரிப்பதில்லை. அறிவியலால் தெரிந்து | 6. புறவயமான உண்மையை அங்கீகரிக்கின்றது. தெரியமுடியாத பொருட்கள் ஏதும் உலகிலில்லை. |

கொள்ள முடியாத பொருட்களால் நிரம்பியதே இவ்வுலகம்.

அறிவியலின் முயற்சியாலும் நடைமுறையாலும் இன்னும் தெரியப்படவேண்டிய பொருட்கள் உலகிலுள்ளன.

7. ஒரு சமுதாயத்தின் (society) ஆன்மீக வாழ்வு (spiritual life) (அதாவது, ஒரு சமூகத்தில் தோன்றும் கருத் துக்கள் (ideas) தத்து வங்கள் (theories) அரசியற் கொள்கைகள் (political views) முதன்மை யானது. இதுதான் அந்தச் சமுதாயத் தின் பௌதிக வாழ்வின் (material life) அதாவது குறிப்பிட்ட உறவுகளைக் கொண்ட சமூக அமைப்பின் அடிப்படை.

7. ஒரு சமுதாயத்தின் பௌதிக வாழ்வு (அதாவது குறிப்பிட்ட உறவுகளைக் கொண்ட சமூக அமைப்பு) முதன்மையானது. இதுதான் அச்சமூகத்தில் தோன்றும் கருத்துக்கள், தத்துவங்கள், அரசியல் கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படை.

8. ஒரு சமுதாயத்தின் ஆன்மீக வாழ்வு தான் புறவய மான உண்மை (objective reality). இது தான் சமுதா யத்தின் பௌதிக வாழ்வை அமைக்கின்றது.

8. ஒரு சமுதாயத்தின் பௌதிகவாழ்வு மனிதனின் அகநிலை விருப்பங்களுக்கு அப்பால்பட்ட ஒருபுறவயமான உண்மை. இந்தப் புறவயமான உண்மையின் பிரதிபலிப்பு தான் ஒரு சமுதாயத்தின் ஆன்மீக வாழ்வாகும்.

9. சமூகக் கருத்துக்கள், தத்துவங்கள், அரசியற் கொள்கைகள், அரசியல் நிறுவனங்கள் ஆகியவற்றின் தோற்றத்தை கருத்துக்கள், தத்துவங்கள், அரசியல் நிறுவனங்களிலேயே காண வேண்டும்.

9. சமூகக் கருத்துக்கள், தத்துவங்கள், அரசியல் கொள்கைகள், அரசியல் நிறுவனங்கள் ஆகியவற்றின் தோற்றத்தை ஒரு சமுதாயத் தின் பௌதிக வாழ்நிலையில், சமூக வாழ்வில் காண வேண்டும். ஏனெனில் இந்தக் கருத்துக்கள், தத்துவங் கள் எல்லாம் சமுதாயத்தின் பௌதிக வாழ்நிலையின், சமூக வாழ்வின் பிரதிபலிப்பு தான். (சமூகக் கருத்துக்களின் தோற்றத்தைத்தான் சமுதாயத்தின் பௌதிக வாழ்வில் காணவேண்டுமே தவிர அது பௌதிக வாழ்வின் மீது செயல்படாது என்று அர்த்தமல்ல. சமுதாயத்தின்

www.tamilarangam.net

பௌதிக வாழ்வை மேம் படுத்தத் தோன்றிய கருத் துக்கள் கொள்கைகள் அரசியல் நிறுவனங்கள் சமுதாயத்தின் பௌதிக வாழ்வின்மீதும் செயல்பட்டு சமுதாயத்தின் பௌதிக வாழ்வை மேலும் மேம்படுத்த உதவுகின்றன.)

10. சமூக உணர்வு (social consciousness) சமூக வாழ்நிலையை (social being) நிர்ணயிக்கின்றது.

10. சமூக வாழ்நிலை சமூக உணர்வை நிர்ணயிக்கிறது.

11. சமூக வளர்ச்சியை நிர்ணயிக்கும் சக்தி புற நிலைக்கப்பால் நிற்கும் ''மனிதனின் அரூபமான கோட்பாடுகளின்'' அடிப்படை யிலமைந்த செயல்களும் பெரிய மனிதர்களின் நல் லெண்ணங்களும் ஆகும்.

11. சமூக வளர்ச்சியை நிர்ணயிக்கும் சக்தி சமுதா யத்தின் பௌதிக வாழ்வின் ஸ்தூலமான நிலைகளின் அடிப்படையி லமைந்த செயல்களும் சமுதாயத்தின் பௌதிக வாழ்வு வளம் பெறுவதற்கான உண்மைத் தேவைகளும் ஆகும்.

## பொருள் முதலியல் (பொருள்முதல்வாதம்) பற்றிப் பிற்போக்குவாதிகளின் அவதூறுப் பிரசாரம்

பொருள் முதலியலார் (பொருள்முதல்வாதி) சுயநலக்காரர். பொருள் மீது அதிகப் பற்று உடையவர் என்றும், கருத்து முதலியலார் சுயநலமில்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக செயல்படுபவர் என்றும் மக்களை நம்பவைக்க தங்கள் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி பிற்போக்காளர்கள் பிரச்சாரம் செய்துள்ளனர். பொருள் முதலியலுக்கும் கருத்து முதலியலுக்கும் இடையிலான உண்மையான, மெய்யியல் வேறுபாட்டிற்கும் பிற்போக்காளர்களின் மேற்கண்ட விளக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. பிற்போக் காளர்களின் மேற்கண்ட விளக்கம் பொருள் முதலியலைக் கொச்சைப்படுத்தத் திட்டமிட்டுச் செய்யப்பட்டதாகும்.

## இருமையியல் ( Dualism - இருமைவாதம்-சம்சயவாதம்)

பொருள் முதலியலுக்கும் கருத்து முதலியலுக்கும் இடையில் இருமையியல் என்று புதிதாக ஒன்று தோன்றியது. கருத்து இருப்பதால்தான் பொருள் இருக்கின்றது என்றோ அல்லது நமது சிந்தனையை சாராமல் பொருள் புறவயமாக இருக்கின்றது என்றோ கூறமுடியாது. பொருட்களின் வெளித் தோற்றங்களைத்தான் நாம் அறியமுடியும். ஆனால் அந்தப் பொருட்களின் அசல் யதார்த்தநிலையை நாம் அறிவது முடியாது என்கிறது இருமையியல்.

www.tamilarangam.net

சுருங்கச் சொன்னால் பொருட்களிடையே நாம் வாழ்வது சினிமாவைப் பார்த்துக் கொண்டிருப்பது போலத்தான். திரையில் பொருட்களின் பிரதி பிம்பங்களைப்பார்க்கின்றோம்; ஆனால் அந்தத் திரையின் பின்னே ஒன்றுமேயில்லை. புற உலகை நாம் பார்ப்பதும் இப்படித்தானாம். சரி, பொருட்களைப் பற்றி மனது எப்படி அறிந்து வைக்கிறது என்று கேட்டால் மனது தன் சொந்த ஆற்றலினாலே அறிகின்றது அல்லது கண்ணுக்குப் புலப்படாத ஆன்மாவின் தூண்டுதலால் அறிகின்றது. அல்லது இன்னும் நமக்குத் தெரியாமலே இருக்கின்ற வேறு ஏதாவது ஒரு ஆற்றலைக்கொண்டு அறிகின்றது என்கிறது இருமையியல்.

பொருட்கள் இல்லை என்று அடித்துச் சொல்வதற்கும், பொருட்கள் இருக்கின்றனவா என்பதை உறுதியாக அறியமுடியாது என்று சொல்வதற்கும் இடையே அவ்வளவு பெரிய வேறுபாடு இல்லை. இருமையியல், கருத்து முதலியலின் மற்றொரு மறைமுக வெளிப்பாடுதான்.

இருமையியல், அறிவியலைப் பொறுத்தவரையில் பொருள் முதலியலாகவே இருக்கின்றது. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல்களை அகற்றிய பின்புதான் அறிவியல் வளரும் என்பதை ஒத்துக்கொள்கின்றது. ஆனால் அடுத்து உடனே பொருட்களின் வெளித்தோற்றங்களைத்தான் அறிவியல் நமக்கு அறிவிக்கின்றது; பொருட்களைத் தவிர யதார்த்த நிலையில் வேறொன்றும் இல்லை என்று நிரூபிக்கத் தயாராகயில்லை; அதைப்பற்றி அறிய மனித அறிவுக்குச் சக்திகிடையாது என்கிறது. "தனது பொருள் முதலியலைப் பற்றித் தாமே வெட்கப்படுகிற பொருள் முதலியலார்" என்று இருமையியலாரை ஏங்கல்ஸ் குறிப்பிடுகிறார்.

தாங்கள் கருத்து முதலியலார் அல்ல. ஏனென்றால் நாங்கள் அறியலியலை உபயோகித்துக் கொள்கின்றோம் என்று ஒரு பக்கத்தில் சொல்வதற்கும், இன்னொரு பக்கத்தில் நாங்கள் பொருள் முதலியலார் அல்ல என்று அதே மூச்சில் சொல்வதற்கும் சிலருக்குச் சந்தர்ப்பத்தை உருவாக்கவே இந்த இருமையியல் பயன்படுகின்றது. "இருமையியலாரைக் கொஞ்சம் கீறிப்பார். அவர் இரத்தத்தில் கருத்து முதலியல் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்ப்பாய்" என்று லெனின் கூறுகின்றார். கருத்து முதலியல், பொருள் முதலியல் இரண்டையும் சமரசப்படுத்த முயலும் இருமையியல் உண்மையில் கருத்து முதலியலைத் தாங்கிப் பிடிப்பதை உணரலாம்.

## மார்க்ஸுக்கு முந்திய கொச்சைப் பொருள் முதலியல் (Vulgar materialism)

சூழ்நிலையால்தான் மனிதன் அமைக்கப்படுகிறான்; சூழ்நிலையை மனிதன் மாற்றமுடியாது. பௌதிகச் சூழ்நிலை மனிதன் மீது தாக்கத்தை உருவாக்க முடியும். ஆனால் மனிதன் இயற்கைமீது சமுதாயத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியாது என்கிறது மார்க்ஸுக்கு முந்திய கொச்சைப் பொருள்முதலியல். இது இயங்காவியலை அடிப்படையாகக் கொண்டது. இது

இப்படி என்றால் புதிய உற்பத்திக் கருவிகளை உருவாக்கி உற்பத்தியை அதிகரித்து இயற்கைமீது தாக்கத்தை உருவாக்கியது எவ்வாறு? புரட்சி மூலம் சமூக மாற்றத்தை 1917ல் ரஷ்யாவில் ஏற்படுத்தியது எவ்வாறு?

இந்தக் கொச்சைப் பொருள் முதலியலின் அடிப்படையில் சில தோழர்கள் தாங்கள் செய்த தவறுக்கு சூழ்நிலைதான் காரணம் என்று தங்கள் தவறுகளை நியாயப்படுத்துகின்றனர். ஸ்டாலின் தவறுகளை விமர்சித்த மாவோ, ஸ்டாலின் தவறுகளுக்கு சூழ்நிலைதான் காரணம் என்று நியாயப் படுத்தாமல் அவரிடம் கணிசமாக இருந்த இயங்காவியல் சிந்தனைதான் அவருடைய தவறுகளுக்குக் காரணம் என்ற விமர்சிக்கின்றார்.

## உலகத்தைப் புரிவதற்குப் பயன்படும் இரு மெய்யியல் ஆய்வுமுறைகள்

உலகத்தைப் புரிந்து கொள்வதற்கும் ஆய்வு செய்வதற்கும் மெய்யியலாளர்கள் (Philosophers) இருமுறைகளை உபயோகப்படுத்துகின்றனர். இயற்கையையும், சமுதாயத்தையும் தெரிந்து கொள்ளப்பயன்படும் மெய்யியல் ஆய்வுமுறை மெய்யியலுக்கும் அறிவியலுக்கும் மிக முக்கியத்துவம் உடைய ஒன்றாகும். சரியான மெய்யியல் ஆய்வுமுறையால் வழி நடத்தப்பட்டால் இயற்கையின் புரியாத உண்மைகளை கண்டுபிடிப்பதில் வெற்றி காணமுடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட மெய்யியல் ஆய்வுமுறை சரியில்லை என்றால் இயற்கையைப் பற்றிய சரியான அறிவைப் பெறவியலாது. அறிவியலின் ஒவ்வொரு பிரிவும் ஒரு குறிப்பிட்ட ஆய்வுமுறையை பயன்படுத்துகின்றது. உதாரணமாக உயிரியல், கூர்ந்து கவனித்தல், அறிவியல் சோதனை போன்ற ஆய்வுமுறையைப் பயன்படுத்துகின்றது. அறிவியலின் ஒவ்வொரு பிரிவிற்கும் உரிய தனிப்பட்ட ஆய்வுமுறை தவிர, அறிவியல் முழுமைக்கும் பொதுவான மெய்யியல் ஆய்வுமுறையை மெய்யியல் வழங்குகின்றது. அப்படி இரண்டு மெய்யியல் ஆய்வுமுறைகள் உள்ளன. ஒன்று இயங்காவியல் ஆய்வுமுறை (Meta physical method). இரண்டாவது இயங்கியல் ஆய்வுமுறை (Dialectical method).

## இயங்காவியல் ஆய்வுமுறை (Metaphysical method)

இயங்காவியல் ஆய்வுமுறைப்படி உலகிலுள்ள எல்லாப் பொருட்களும் (Things) நிகழ்வுகளும் (Phenomena) தானாக இயங்குவதில்லை. மாற்றம் வளர்ச்சிக்குள்ளாவதில்லை. இன்று இயற்கையில் என்னென்ன பொருள்கள் நிகழ்வுகள் நிலவுகின்றனவோ, அவை அனைத்தும் இன்று அவை கொண்டுள்ள இதே பண்புகளுடன் கடந்த காலத்திலும் நிலவின; எதிர்காலத்திலும் அவ்வாறே நிலவும். ஆனால் அவற்றின் அளவில் மாற்றம் ஏற்படலாம் என்று இயங்காவியல் கூறுகின்றது. அதாவது ஒவ்வொரு பொருளும் தனது அளவில் மாற்றத்தை பெறலாமே ஒழிய குணத்தில் எவ்வித மாற்றத்தையும் பெறமுடியாது என்று அது கூறுகிறது.

இன்று நிலவுகின்ற வர்க்க வேறுபாடு, சுரண்டல், மனிதன் தோன்றியதிலிருந்தே நிலவுகின்றது. எதிர்காலத்திலும் மனித சமுதாயம் நீடிக்கும்வரை வர்க்க வேறுபாடுகள் நிலவும் என்பதும் அதன் முடிவாகும். இம்முடிவுகள் யாருக்குப் பயன்படும்? சுரண்டும் வர்க்கத்துக்கு தனது சுரண்டலைப் பாதுகாக்கவே பயன்படும். சுரண்டலும் வர்க்க வேறுபாடுகளும் சமுதாயத்திலிருந்து பிரிக்க முயாதவை - அகற்ற முடியாதவை - என்று மக்களுக்குப் போதிக்க அது பயன்படும். இதுவே இயங்காவியல் பார்வை.

## இயங்கியல் ஆய்வுமுறை (Dialectical method)

இயங்கியல் ஆய்வுமுறைப்படி, உலகிலுள்ள எல்லாப் பொருட்களும், நிகழ்வுகளும் தொடர்ந்து தானாக இயங்கிக் கொண்டும், மாறிக்கொண்டும், வளர்ச்சியடைந்து கொண்டும் இருக்கின்றன. இயற்கையில் இன்றுள்ள பொருட்கள் அனைத்தும் அப்படியே கடந்த காலத்தில் நிலவியது கிடையாது. உதாரணமாக நாம் வாழுகின்ற பூமிகூட, இயற்கையின் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றியதுதான். பூமியில் இன்றுள்ள மலைகள், ஆறுகள் அனைத்துமே பூமியின் தொடக்ககாலத்தில் நிலவியது கிடையாது. பூமியின் வளர்ச்சியில் புதியதாக அவற்றில் பல தோன்றிபிருக்கின்றன.

அதேபோல் மனிதன்கூட பூமியின் தொடக்க காலத்தில் தோன்றியிருக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் தோன்றினான். அதுபோல இன்றுள்ள அனைத்தும் அப்படியே எதிர்காலத்திலும் நிலவாது. பல்வேறு பண்பு மாற்றங்கள் ஏற்படும். பல்வேறு புதிய வளர்ச்சிகளைப் பொருட்கள் பெறும்.

சமுதாயத்திற்கும் மேற்கூறப்பட்ட கொள்கை பொருந்தும். இன்றுள்ள வர்க்கவேறுபாடுகள், சுரண்டல்கள் மனித சமுதாயத்தின் தொடக்க காலத்தில் நிலவியது கிடையாது. அவை சமுதாயத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றியவையாகும். மேலும் இன்றுள்ள வர்க்கங்கள் வர்க்க சமுதாயத்தின் ஆரம்பத்தில் நிலவியது கிடையாது. உதாரணமாக முதலாளி தொழிலாளி என்ற வர்க்கங்கள் 15ஆம் நூற்றாண்டில் தோன்றியதேயாகும். அதற்கு முன்பு ஆண்டை - அடிமை என்ற வர்க்கங்கள், நிலப்பிரபு - விவசாயி என்ற வர்க்கங்கள் நிலவின. மேலும் இவ்வர்க்க வேறுபாடு எதிர்காலம் முழுவதும் தொடர்ந்து நீடிக்காது. இதுவே இயங்கியல் பார்வை.

## மார்க்ஸிய மெய்யியல் என்றால் என்ன?

பொருள் முதலியலுடன் இயங்கியல் உடலும் உயிரும் போல இணைக்கப்படும் போதுதான் அது உண்மையானதாகவும் அறிவியல் பூர்வமானதாகவும் மாறுகின்றது. இந்த இணைப்பு மார்க்ஸிய மெய்யியல் அதாவது இயங்கியற் பொருள் முதலியலில் செய்யப்பட்டுள்ளது.

## மார்க்ஸிய மெய்யியல் உருவானதற்கான மூன்று அடிப்படைகள்

### I. பாட்டாளி வர்க்கத்தின் தோற்றமும் வர்க்கப் போராட்டமும்

1830ஐ அடுத்து இங்கிலாந்தில் அரசியல் உரிமைகளுக்காக தொழிலாளர்களின் வெகுஜனப் போராட்டம் நடந்தது. இதேபோல் பிரான்ஸிலும், ஜெர்மனியிலும் தொழிலாளர் போராட்டம் நடந்தது. முதலுக்கும், உழைப்பிற்கும் இடையே நிகழ்ந்த இந்த ஆரம்ப வர்க்கப்போராட்டங்கள் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்கு வழிவகுத்தது. சுரண்டலையும் அடக்குமுறையையும் எதிர்த்து விடுதலைக்குப் போராடும் பாட்டாளி வர்க்கத்துக்கு ஒரு மெய்யியல் தேவைப்பட்டது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ததுதான் மார்க்ஸிய மெய்யியல்.

### II. இயற்கை அறிவியலின் மூன்று சிறப்பான கண்டுபிடிப்புகளும் வரலாற்று அறிவியலின் வளர்ச்சியும்

#### (1) ஆற்றலின் அழிவின்மையும் அதன் மாற்றமும் பற்றிய விதி (Law of conservation and transformation of energy - 1845)

வெப்பம் என்பது ஒரு பொருள் என்றும் அது ஒரு பொருளுக்கு உள்ளும் வெளியும் செல்லக்கூடியது என்றும் கூறப்பட்டது. மின்சாரம், காந்தம் போன்றவை பொருட்கள் மீது செயல்படக்கூடிய தனித்தனியான "சக்திகள்" என்றும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவையாகவும் கருதப்பட்டன. இது இயங்காவியலின் அடிப்படையாக அமைந்தது.

1845ல் கண்டுபிடிக்கப்பட்ட ஆற்றலின் அழிவின்மையும் அதன் மாற்றமும் பற்றிய விதிப்படி ஆற்றலை அழிக்கவும் முடியாது. ஆக்கவும் முடியாது. இந்த அகில அண்டத்திலுள்ள மொத்த ஆற்றலின் அளவைக் கூட்டவும் முடியாது. குறைக்கவும் முடியாது. இயந்திர ஆற்றல், காந்த ஆற்றல், வேதியியல் ஆற்றல் முதலிய எல்லாம் ஆற்றலின் பல்வேறு வடிவங்கள். இயக்கத்தின் பல்வேறு வடிவங்கள், எங்கும் நிறைந்த ஒரு பொது இயக்கத்தின் பல்வேறு வெளிப்பாடுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஒன்று மற்றொன்றாக மாறக்கூடியது. இயற்கையின் முழு இயக்கமும் - இயக்கத்தின் ஒரு வடிவம் மற்றொன்றாக மாறக்கூடிய ஒரு தொடர்ச்சியான செயற்போக்காகும்.

நீராவி இயந்திரத்தை உருவாக்கும் முயற்சியில் இந்த விதி உருவானது. நீராவி இயந்திரத்தில் நிலக்கரியிலிருந்து, அதாவது வேதியல் ஆற்றலிலிருந்து (Chemical energy - இரசாயன ஆற்றல்) வெப்ப ஆற்றல் வெளிப்பட்டு நீராவி உருவாகி அது சிலிண்டரில் (Cylinder) விசையுடன் செலுத்தப்பட்டுப் பிஸ்டனை (Piston) நகர்த்தும்போது சக்கரங்கள் சுழன்று இயந்திர ஆற்றல் உருவாகின்றது. நிலக்கரிக்கு ஆற்றல் எங்கிருந்து வந்தது? ஒளிச்சேர்க்கை மூலம் தாவரங்களில் சேர்த்து வைக்கப்பட்ட ஆற்றல்தான் நிலக்கரியிலுள்ள ஆற்றல் என்று பின்பு தெரியவந்தது. சூரியனிலுள்ள ஹைட்ரஜன் (Hydrogen) அணுக்கள் கனமான ஹீலியம் (Helium) அணுக்களாக மாறும்போக்கில்

மிஞ்சிய ஹைட்ரஜனின் நிறை ஒளி ஆற்றலாக [ஐன்ஸ்டினின் (1879 - 1955) பொருள் ஆற்றலாக மாறும் விதிப்படி, ஆற்றல் = பொருளின் நிறை x (ஒளி வேகம்)$^2$] சூரியனில் வெளிப்படுகின்றது.

பொருள் ஆற்றலாக மாறுவதை ஐன்ஸ்டின் கண்டு பிடித்தார். பொருளும், ஆற்றலும் ஒன்றுக்கொன்று தொடர்பு டையவை. ஒன்று மற்றொன்றாக மாறக்கூடியது என்ற உண்மை வெளிப்பட்டது. இயற்கை இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒன்று மற்றொன்றாக மாறிக் கொண்டிருக்கின்றது என்ற இயங்கியலுக்கு அடிப்படையான உண்மையை ஐன்ஸ்டினின் இந்தக் கண்டுபிடிப்பு மேலும் உறுதிப்படுத்தியது.

### (2) டார்வினின் படிமுறை வளர்ச்சிக் கோட்பாடு (டார்வினின் பரிணாமக் கொள்கை Darwins's Theory of Evolution - 1859)

உயிரினங்கள் கடவுளால் படைக்கப்பட்டதாகவும் ஒரு உயிரினத்திற்கும் மற்றொரு உயிரினத்திற்கும், உதாரணமாக பாம்புக்கும் பறவைக்கும் தொடர்பு இல்லாததாகவும் ஒன்று முற்றிலும் மற்றதிலிருந்து வேறுபட்டதாகவும் கருதப்பட்டது. இது மாறா நிலையியலின் அடிப்படையாக அமைந்தது. டார்வின் எப்படி ஒரு உயிரினம் மற்ற உயிரினத்துடன் தொடர்பு கொண்டிருக்கின்றது என்பதையும் எப்படி ஒன்று மற்றொன்றாக பரிணாம வளர்ச்சி பெற்றது என்பதையும் விளக்கினார். உதாரணமாக மீனுக்கு நீந்துவதற்குப் பயன்பட்ட தோல்பை (bladder) எப்படி பின்னால் நிலத்தில் வாழும் மிருகத்துக்கு நுரையீரலாக (lung) மாறியது. ஊர்வனவற்றின் செதில்கள் எப்படிப் பறவைகளின் இறகுகளாக மாறின என்பது போன்ற பல மாற்றங்களை விளக்கினார். உயிரினங்களில் ஒன்றுக்கும் மற்றொன்றுக்குமுள்ள தொடர்பும் ஒன்று மற்றொன்றாக மாறுவதும் பற்றிய இந்தக் கண்டுபிடிப்பு இயங்கியல் கண்ணோட்டத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

### (3) உயிர்மத்தின் (cell - உயிரணு) கண்டுபிடிப்பு - 1839

உடல் வெவ்வேறான திசுக்களால் (Tissues) ஆனது என்ற கருத்து ஆரம்பத்தில் நிலவியது இது இயங்காவியலின் அடிப்படையாக இருந்தது. மிருகங்கள், தாவரங்கள் போன்ற எல்லா உயிரினங்களின் அடிப்படை, உயிர்மம் (உயிரணு) என்றும், இந்த உயிர்மங்களின் எண்ணிக்கை அதிகரிப்பாலும் (multipilcation) பிளவுகளினாலுமே (division) தாவரங்கள் அல்லது மிருகங்கள் வளர்கின்றன என்ற உண்மை கண்டறியப்பட்டது. உயிரினங்களுக்கிடையிலான தொடர்பு மற்றும் உயிர்மங்களின் இயக்கத்தில் உயிரினங்கள் வளர்ச்சி பெறுவதையும் பற்றிய உண்மை இயங்கியலின் அடிப்படையாக அமைந்தது.

## வரலாற்று அறிவியலின் (Historical Science) வளர்ச்சி

சமூக வாழ்வும் மாறிக் கொண்டிருக்கின்றது என்ற உண்மையை வரலாற்று அறிவியல் விளக்கியது. சமுதாயத்தில் வர்க்கங்கள் உள்ளன.

வர்க்கப் போராட்டங்கள் நிகழ்கின்றன. இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் நிகழ்ந்த முதலாளியப் புரட்சி (bourgeoise revolution - முதலாளித்துவப் புரட்சி) இந்த அடிப்படையில் நிகழ்ந்ததுதான். பழைய நிலவுடைமை அமைப்பு (feudal system - நிலப்பிரபுத்துவ அமைப்பு) ஒழிக்கப்பட்டு புதிய முதலாளிய அமைப்பு (Capitalist system) உருவானது.

சுருங்கச் சொல்லப்போனால் இயற்கையையும், சமுதாயத்தையும் பற்றிய அறிவியலின் வளர்ச்சி இயங்காவியல் பார்வையை உபயோக மற்றதாக்கியது. அந்த இடத்தை நிரப்பப் புதிய இயங்கியல் பார்வையின் தேவையை உருவாக்கியது.

## மார்க்ஸ - எங்கெல்ஸுக்கு முந்திய மெய்யியலில் பொருள்முதலியலும் இயங்கியலும்

மார்க்ஸ் எங்கல்ஸின் மெய்யியல் உலகக் கலாச்சார வளர்ச்சியிலிருந்து தனித்துத் தோன்றவில்லை. மார்க்ஸுக்கு முந்திய முற்போக்கு சிந்தனையாளர்களின் குறைபாடுகளைக் களைந்து சரியான அம்சங்களை வளர்த்தெடுத்துதான் மார்க்ஸிய மெய்யியல் உருவானது. புகழ்மிக்க ஜெர்மனிய கருத்துமுதலியல் மெய்யியலார் ஹெகலின் (Hegel 1770-1831) மெய்யியல் போதனைகளில் இயங்கியல் பார்வை அடங்கியுள்ளது. மற்றொரு புகழ்மிகு ஜெர்மானிய பொருள்முதலியல் மெய்யியலார் லூட்விக் புயர்பாக்கின் (Ludwig Fuerbach - 1804 - 1872) மெய்யியல் போதனைகளில் இயற்கையைப் பற்றிய பொருள்முதலியல் கருத்து அடங்கியுள்ளது.

## பழைய பொருள் முதலியலின் குறைபாடுகள் :

(1) பழைய பொருள் முதலியல் இயங்காவியல் பார்வையுடையது. சூரியன் கோள்கள் போன்ற பௌதீக பொருட்களும், இயற்கையின் உயிரினங்களும் நிலையான தன்மையுடையவை. ஒன்று மற்றொன்றாக மாறாது என்ற கொள்கை உடையது.

(2) புயர்பாக் உட்பட முந்தைய பொருள்முதலியலார்கள் இயற்கை மனிதன் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை உணர்ந்தார்களே தவிர மனிதன் கடைசல் இயந்திரம் (lathe) போன்ற உற்பத்திக் கருவிகளை உருவாக்கி உற்பத்தியை அதிகரித்து இயற்கைமீது ஏற்படுத்தும் தாக்கத்தையும் சமூக அமைப்பை மாற்றி சமுதாயத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தையும் உணரவில்லை.

(3) பழைய பொருள் முதலியலார்கள் இயற்கையை விளக்குவதில் பொருள்முதலியலார்களாக இருந்தனர். சமூக வாழ்வை விளக்குவதில் கருத்து முதலியலார்களாக இருந்தனர். சமூகத்தின் வளர்ச்சி ஆற்றல்மிக்க தலைவர்களின் விருப்பங்கள் எண்ணங்களின் அடிப்படையில் அமைந்ததாகக் கருதினார்கள். சமூக ஒழுக்கங்கள் சமுதாயத்தின் பௌதீக வாழ்நிலைகளைச் சாராமல், என்றும் மாறாது நிலைத் திருப்பதாகக் கருதினார்கள்.

மார்க்ஸ் - ஏங்கல்ஸ் பொருள் முதலியலுக்கு இயங்கியல் பார்வை அளித்து அதைச் சமூக வாழ்வுக்கும் பொருத்தினார்கள். இவ்வாறாக பொருள் முதலியலை முழுமையாக்கி இயங்கியற் பொருள்முதலியலை உருவாக்கினார்கள்.

## பழைய இயங்கியல் பார்வையின் குறைபாடுகள்

மெய்யியலில், பொருள் முதலியலும் இயங்கியலும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் தனித்து வளர்ந்துள்ளன. பொருள் முதலியல் மாறா நிலைப்பார்வை கொண்டிருந்ததுபோல் ஹெகலினுடைய கருத்து முதலியல் போதனைகளில் இயங்கியல் பார்வை அடங்கியுள்ளது. கருத்து ஒரு நிலை (state) யிலிருந்து இன்னொரு நிலைக்கு வளர்வதாகக் கூறினார். ஆனால் இயற்கை கால ஓட்டத்தில் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு வளர்வதை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. இயற்கையை கருத்தின் பிம்பமாகப் பார்த்து கருத்துமுதலியலாராக இருந்தார்.

மார்க்ஸ், ஹெகலினுடைய கருத்து முதலியலில் அடங்கிய முற்போக்கு அம்சம் வாய்ந்த இயங்கியல் பார்வையை கருத்து முதலியலிலிருந்து பிரித்து, ஹெகலினுடைய இயங்கியலை பொருள்முதலியல் அடிப்படையில் முற்றாக மாற்றி அறிவியல்பூர்வமான இயங்கியல் பொருள் முதலியலை உருவாக்கினார். புரட்சிகர நடைமுறையின் சாதனைகள், அறிவியலின் சாதனைகள் இவற்றின் அடிப்படையில்தான் இதைச் செய்ய முடிந்தது.

## இயங்கியற் பொருள் முதலியலின் சிறப்புத்தன்மை

மார்க்ஸ் கூற்றுப்படி முந்தைய மெய்யியலார்களின் கடமை உலகத்தை ஏதாவது ஒரு வழியில் விளக்குவது மட்டுமாக இருந்தது. ஆனால் பாட்டாளிவர்க்கம் தோன்றியபின்பு உலகத்தை மாற்றுவதற்கு மெய்யியல் தேவைப்பட்டது. முதலாளியத்துக்குப் (Capitalism) பின் ஏகபோக முதலாளிகள் ஆட்சிக்கு வந்த பின்பும் முதலாளி அமைப்பைக் கட்டிக் காப்பதில்தான் அவர்கள் நலன் அடங்கியுள்ளது. பழைய மெய்யியல்கள் உழைக்கும் மக்கள் நலனுக்கு எதிரானவை. ஆனால் பாட்டாளி வர்க்கமும் எல்லா உழைக்கும் மக்களும் பழைய உலகத்தை மாற்றி புதிய வர்க்கமற்ற சோசலிச சமுதாயத்தை உருவாக்குவதில் ஆர்வமுடையவை. அவர்களுடைய நோக்கம் சமூகத்தின் முற்போக்கு வளர்ச்சிக்கு முரணானதல்ல. வரலாற்று விதிகளுடன் முழுமையாக ஒத்துப் போகின்றது. உழைக்கும் மக்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் தலைமை தாங்கி புரட்சிகரப் போராட்டத்தை நடத்துகின்ற முன்னேறிய புரட்சிகர வர்க்கமான பாட்டாளி வர்க்கத்திற்கு ஒரு புரட்சிகர மெய்யியல் தேவைப்படுகின்றது. சமூகத்தின் வளர்ச்சி விதிகளைப் புரிந்த பின்பு திட்டமிட்டு உணர்வு பூர்வமான செயல்மூலம்தான் சமூகத்தை மாற்ற முடியும். இதற்குப் பயன்படும் ஆயுதம்தான் பாட்டாளி வர்க்கத்தின் தேவை. மார்க்ஸிய மெய்யியலான இயங்கியல் பொருள் முதலியலே உழைக்கும் மக்களின் ஆயுதமாகும். மார்க்ஸ் - ஏங்கெல்ஸால் உருவாக்கப்பட்ட இந்த

மெய்யியல் லெனினாலும், மாவோவாலும் உயர்நிலைக்கு வளர்த்தெடுக்கப்பட்டது. அறிவியலின் வளர்ச்சியும் புரட்சிகர நடைமுறையின் அதிகரிப்பும் இம்மெய்யியலை மேலும் வளப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

## இயங்கியல் விதிகள்

### விதி (Law) என்றால் என்ன ?

" ஒரு பொருள் திரவத்தில் மூழ்கியிருக்கும்போது அதன் பருமனுக்குச் (volume) சமமான திரவத்தின் எடையை இழப்பதாகத் தோன்றும்" என்ற ஆர்க்கிமெடிஸ் விதியை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். எல்லாப் பொருட்களிலும் செயல்படும் புவியீர்ப்பு விசை (gravitational force) இந்தப் பொருளிலும் கீழ்நோக்கி (பூமியை நோக்கி) செயற்படுகின்றது. ஆனால் பொருள் திரவத்தில் மூழ்கியிருக்கும்போது திரவ மட்டத்திலிருந்து பொருளின் பல்வேறு பாகங்களின் ஆழ வித்தியாசத்தைப் பொறுத்து இருக்கும் அழுத்த வித்தியாசத்தின் காரணமாக இங்கு ஒரு விசை மேல்நோக்கியும் செயல்படுவதால் பொருள் எடையை இழக்கின்றது. இவ்விதி பூமியின் எல்லாப் பகுதிக்கும் பொருந்தும். கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய எல்லாக்காலத்திலும் இவ்விதி செயல்படும்.

விதி என்பது பொருளுக்கும், நிகழ்வுக்கும் இடையிலான உறவு ஆகும். இது தற்செயலாக நிகழ்வதில்லை. உலகிற்கப்பாற்பட்ட "ஆற்றல்" களால் நிகழ்வதல்ல. திடீரென்று ஏற்படுகின்ற சூழ்நிலையில் ஏற்பட்டதல்ல. இது இயற்கை நிகழ்ச்சிகளுக்கிடையிலான உள்ளுறைவைப் பொறுத்ததாகும். ஒரு விதியானது எல்லா உறவுகளையும் பிரதிபலிக்காது. அடிப்படையான சில தீர்க்கமான உறவுகளை மட்டுமே பிரதிபலிக்கும். விதி இடத்திற்கு இடம் மாறாது, காலத்தைப் பொறுத்தும் மாறாது.

பொருள்களும், நிகழ்வுகளும் (Phenomena) புறவயமாக நிலவுவது போல் அவற்றிற்கிடையிலான உறவை நிர்ணயிக்கின்ற விதிகளும் புறவயமாக நிலவுகின்றது. இது விதியின் முக்கியத்தன்மை ஆகும்.

### சமூக வளர்ச்சி பற்றிய விதிகள்

சமூக வளர்ச்சி பற்றிய விதிகளும் இயற்கை விதிகள் போல் புறவயத்தன்மை கொண்டதாகும். புறவயத் தன்மையுடைய விதிகளை ஒட்டியே மனிதன் மாற்றங்கள் கொண்டு வர முடியுமே தவிர அகநிலை விருப்பங்களின் அடிப்படையில் மாற்றம் உண்டாக்க முடியாது.

### அரசாங்கம் இயற்றும் சட்டங்கள்

அரசாங்கம் இயற்றும் சட்டங்களையும் விதிகள் என்று கூறுகின்றோம். சட்டங்கள் மனிதனால் இயற்றப்படுபவை. இவை இயற்கைக்கும்,

சமூகத்திற்கும் பொருந்தக்கூடிய மெய்யியல் விதிகளிடமிருந்து மாறுபட்டவை. தொடர்பில் லாதவை.

## I. இயங்கியல் ரீதியான மாறுதல் பற்றிய விதி

**"எதுவும் இருக்கின்ற இடத்திலேயே இருந்து கொண்டிருப்பதில்லை. எதுவும் இருக்கின்ற தன்மை யிலேயே இருந்து கொண்டிருப்பதில்லை".**

உதாரணமாக ஒரு ஆப்பிள் பழத்தை எடுத்துக்கொண்டால் இந்த நேரத்தில் இருக்கின்ற தன்மையில் அது முன்பு எப்போதும் இருந்ததில்லை. இதற்கு முன்பு அது காயாக, பூவாக, மொட்டாக, அதற்கும் முன்பு ஆப்பிள் மரமாக இருந்ததைக் காணலாம். ஆப்பிள் பழம் மரத்திலிருந்து விழுந்தால் அது அழுகி, வாடி, வதங்கி, இற்று அதன் விதைகள் வெளியே விழுந்து சூழ்நிலை சரியாக இருந்தால் பல ஆப்பிள் மரங்கள் வளரும். ஆகவே ஆப்பிள் பழம் முன்பு இருந்ததற்கும் (அதன் இறந்த காலத்திற்கும்) நாளை இருக்கப் போவதற்கும் (அதன் எதிர்காலத்திற்கும்) மத்தியிலுள்ள ஒரு இடைநிலைத் தோற்றமாகத்தான் இருக்கக்காண்கிறோம். மேலும் ஆப்பிள்பழம் பூமியோடு சுற்றிக் கொண்டிருக்கின்றது. இதே போலத்தான் முதலாளிய சமுதாய அமைப்பும் சென்ற காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் இடையிலுள்ள ஒரு இடைநிலை அமைப்பே. மேலும் முதலாளிய அமைப்பு ஒரு நாட்டில் மாற்றமடையும் போது மற்றொரு நாட்டில் அது தோன்றுகின்றது.

இறுதியானது, பரமமானது, புனிதமானது என்று எதையும் இயங்கியல் கருதவில்லை. இயக்கத்திலிருந்து, மாறுதலிலிருந்து வரலாற்றின் மாற்றங்களிலிருந்து எதுவும் தப்பமுடியாது என்று இயங்கியல் கூறுகின்றது. "உருவாகி வருவது, மறைந்து போய்க் கொண்டிருப்பது என்ற இடையறாத இயக்கப் போக்கு ஒன்றுதான் நிலையானது" என்கிறது இயங்கியல்.

ஆப்பிள் காய் பழுத்துத் தீரவேண்டிய அவசியம் என்ன? ஆப்பிளுக்குள் இருக்கிற பொருட்களின் இடையேயுள்ள உள்ளிணைப்புகள் ஆப்பிளைப் பழுக்கும் படி தூண்டுகின்றன. பூ காயாக மாறுவதற்கும் இந்த உள்ளிணைப்புகள்தான் காரணம். இதைப் பற்றி பின்னால் விளக்கமாகக் காணலாம். ஆப்பிள் காயைக் கல்லால் சிதைப்பதாகக் கொள்வோம். ஆப்பிள் காய் நிச்சயம் மாறுதல் அடைந்துள்ளது. இந்த மாறுதல் இயங்கியல் மாறுதல் அல்ல, இது இயந்திர இயக்க வகைப்பட்ட மாறுதலாகும்.

## II. பரஸ்பர வினை பற்றிய விதி (Law of reciprocal action)

**" ஒவ்வொன்றும் மற்றொன்றைப் பாதிக்கிறது"** இதுதான் பரஸ்பர வினை என்ற விதியாகும். ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு இயக்கப் போக்கும் (Process) மற்றப் பொருட்களுடன், மற்ற இயக்கப் போக்குகளுடன் உள்ளுறவு (inter relationship) உள்சார்பு (inter dependence) உள்ளிணைப்பு inter connection) கொண்டுள்ளது என்ற அடிப்படையில்

பொருளை, இயக்கப் போக்குகளை ஆராய வேண்டும். ஒரு பொருளை தனியாக அதன் சூழ்நிலையி லிருந்து பிரித்து ஆராயக் கூடாது. உதாரணமாக ஆப்பிளை ஆராய வேண்டுமானால், ஆப்பிள் மரத்தை, அது வளருகின்ற மண்ணை, அதைப் பாதிக்கின்ற, காற்றை, வெயிலை, மழையை ஆராய வேண்டும். இதைத்தான் இயக்கப் போக்குகளுக் கிடையேயுள்ள சங்கிலிப் பிணைப்பு என்று கூறுகிறோம். ஆப்பிள் பழம் அந்த மரம் தந்த பழம் மட்டுமல்ல, இயற்கை முழுவதும் சேர்ந்து அந்தப் பழத்தைத் தந்தது என்று கூடச் சொல்லலாம்.

இயங்கியலைப் பொறுத்தவரையில் எதுவும் முடிவானதல்ல. ஒவ்வொன்றும் ஒரு இயக்கப் போக்கின் முடிவாகவும் மற்றொரு இயக்கப் போக்கின் ஆரம்பமாகவும் இருக்கின்றது. ஒவ்வொன்றும் எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கின்றது. வளர்ச்சி பெற்றுக்கொண்டே இருக்கின்றன. அதனால்தான் முதலாளிய சமுதாயம் சோசலிச சமுதாயமாக மாறும் என்று நிச்சயமாக கருதுகின்றோம். நாம் விரும்புகின்ற மாறுதல் ஏற்பட்டே தீரும் என்ற இயங்கியல் போக்கு இருக்கும்போது நாம் ஏன் போராடவேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. மார்க்ஸ் சொல்வது போல், "சோசலிசம் பிறப்பதற்கு ஒரு மருத்துவச்சி அவசியம்" அதனால்தான் ஒரு புரட்சி அவசியமாகின்றது. இந்த மாறுதல் ஏற்படுவதைத் தடுக்கவோ துரிதப்படுத்தவோ ஆற்றல் பெற்றிருக்கின்ற மனிதர்கள் வகிக்கும் பாத்திரத்தை நாம் மறக்கலாகாது.

சமூகமாறுதல் ஏற்பட்டே தீரும் என்ற இயங்கியல் கணிப்பு மனிதர்களின் உணர்வு பூர்வமான செயலையும் உள்ளடக்கி யதாகும். சமூக மாற்றத்தை தடுக்க விரும்பும் வர்க்கங்களின் உணர்வு பூர்வமான செயலையும் சமூக மாற்றத்தை உண்டாக்க விரும்பும் வர்க்கங்களின் உணர்வு பூர்வமான செயலையும் உள்ளடக்கியதாகும். சோசலிச சமுதாயம் உறுதிப்படுவதற்கு முன், அதைத் தடுக்க விரும்பும் வர்க்கங்களின் ஆதிக்க நிலையைப் பொறுத்து அது பின்னடைவுக்குள்ளாவதும் உண்டு.

## III. அளவு மாற்றம் (Quantitative change) குணமாற்றம் Qualitative change) அடைதல் பற்றி விதி

ஒரு பொருளின் நிறை (mass) அளவு, வெப்பநிலை போன்றவை பொருளின் தன்மை மாறாமல், அதிகரிப்பது அல்லது குறைவது அளவு மாற்றம் எனப்படும். இந்த அளவு மாற்றமே பெருக்கம் (growth) எனப்படும். இந்த மாற்றம் தொடர்ந்து எல்லையில்லாமல் நிகழமுடியாது. ஒரு குறிப்பிட்ட நிலையில் இது குணமாற்றத்திற்கு இட்டுச் செல்கின்றது. இந்த குணமாற்றம் அளவு மாற்றத்தோடு ஒப்பிடும்போது ஒரு பாய்ச்சலில் (leap) நிகழ்கின்றது.

உதாரணமாக நீரைச்சூடாக்கும்போது வெப்பத்தின் அளவு அதிகரித்து ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் (Critical temperature) அதாவது நிலைமாற்ற வெப்பநிலையில் அது நீராவியாக மாறுகின்றது. திரவம் வாயுவாக குணமாற்றம் அடைகின்றது.

ஒரு கம்பளிப்புழு (caterpillar) பெரிதாகவும் தடிமனாகவும் அளவு மாற்றம் அதாவது பெருக்கம் அடைகின்றது. பின்பு அது தன்னைச் சுற்றி ஒரு கூட்டைப் பின்னி அதை உடைத்து வண்ணத்துப் பூச்சியாக (butterfly) வெளிப்படுகின்றது. பெரிதாக வளர்ந்த கம்பளிப்புழு வண்ணத்துப் பூச்சியாக வளர்ச்சி (development) அடைகின்றது.

இந்த இரண்டு இயக்கப் போக்கிலும் அளவு மாற்றம் புதிய பொருளை (குணமாற்றத்தை) உருவாக்குகின்றது. ஆனால் நீராவியை குளிரச்செய்து நீராக மாற்ற முடியும். எனவே இது வெறும் மாற்றம் எனப்படுகின்றது. ஆனால் வண்ணத்துப் பூச்சியை மீண்டும் கம்பளிப்புழுவாக பழைய நிலைக்கு கொண்டுவரமுடியாது. எனவே இது வளர்ச்சி எனப்படுகின்றது.

குணமாற்றமடைந்த பொருளை இயக்கப் போக்கைத் திரும்ப பழைய நிலைக்கு கொண்டு வரவியலுமென்றால் அது மாற்றம் எனப்படுகின்றது. கொண்டு வரவியலாதென்றால் அது வளர்ச்சி எனப்படுகின்றது.

இயற்கை அறிவியலில் (Science of Nature) கூடுதல் குறைத்தல் என்ற வெறும் அளவுமாற்றம் குணமாற்றத்தை உருவாக்குகின்றது. எல்லாத் தனிமங்களும் (element) அணுக்களால் (atoms) ஆனது. அணுவில் அணுக்கரு உள்ளது. அணுக்கருவில் புரோட்டான்களும் (Protons) நியூட்ரான்களும் (Neutrons) உள்ளன. அணுக்கருவைச் சுற்றி புரோட்டான் களுக்குச் சமமான எண்ணிக்கையில் எலக்ட்ரான்கள் (electrons) உள்ளன. அணுக்கருவில் உள்ள புரோட்டான் களின் எண்ணிக்கை வேறுபடும் போது வெவ்வேறு குணங்களைக் கொண்ட வெவ்வேறு தனிமங்கள் உருவாகின்றன. இதைப்போலவே வேதியல் கூட்டுப் பொருட்களில் (chemical compound) உள்ள மூலக்கூறில் (molecule) ஒரு அணுவை அதிகரித்தால் புதிய வேதியல் குணங்களைக் கொண்ட புதிய கூட்டுப்பொருள்கள் உருவாகின்றன. அளவுமாற்றம் குணமாற்றமடையும் விதி சமுதாயத்திற்கும் பொருந்தும். தொழில் முதலாளியம் (Industrial capitalism - தொழில் முதலாளித்துவம்) தோன்றுவதற்குமுன் காலனிய கொள்ளை (colonial plunder) மூலம் ஒருசிலர் கையில் பணம் குவிந்து கொண்டே இருந்தது. மற்றொரு பக்கம் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட கூலி விவசாயிகள் சொத்தற்ற பாட்டாளிகளாக மாறிக்கொண்டிருந்தனர். இந்த இயக்கப்போக்கின் ஒரு குறிப்பிட்ட நிலையில் தொழில் நடத்தப் போதுமான முதலும் பாட்டாளிவர்க்கமும் உருவாயின. தொழில் முதலாளியம் உருவானது. அளவுமாற்றத்தால் சமூக வளர்ச்சியில் ஒரு புதிய கட்டம் உருவானது. அளவுமாற்றம் குணமாற்றத்திற்கு அடிப்படையாக அமைவதால் ஒரு குறிப்பிட்ட குணத்தை உருவாக்க அதற்கு அடிப்படையாகவுள்ள எந்த அளவைக் கூட்டுவது குறைப்பது என்று ஆய்வு செய்ய வேண்டும்.

## குணமாற்றம் திடீரென நிகழ்ந்து படிப்படியாக முடிவுறுதல்

தொடர்ந்து படிப்படியாக ஏற்படும் அளவுமாற்றம் ஒரு குறிப்பிட்ட நிலையில் தொடர்பு அறுந்து பாய்ச்சலில் திடீரென குணமாற்றம் அடைகின்றது. குணமாற்றம் எப்போதும் திடீரென நிகழ்வதுதான். அது திடீரென நிகழாமல் இருக்க முடியாது. அளவு மாற்றத்தின் ஒரு குறிப்பிட்ட நிலையில் முன்பு இல்லாத புதிய குணம் உருவாகிறது. புதிய காரணிகள் செயல்படுகின்றன. புதிய விளைவுகள் உருவாகின்றன. புதிய இயக்க விதிகள் செயல்படுகின்றன. புதிய குணம் முதலில் தோன்றுவதைத்தான் "பாய்ச்சல்" என்று கூறுகிறோம். குணமாற்றம் திடீரெனத் தோன்றினாலும் அது படிப்படியாகத்தான் தொடர்ந்து நிகழ்கின்றது. இது நிகழ்ந்து முடிந்து பழையது மறைந்து புதியது உருவாவதற்கு எடுக்கும் காலம் நிகழ்வைப் பொறுத்து சூழ்நிலையைப் பொறுத்து வேறுபடுகின்றது.

நீர் சூடாக்கப்படும் போது நீராவி திடீரெனத் தோன்றினாலும் நீர் நீராவியாக மாறுதல் படிப்படியாகத்தான் நிகழ்ந்து முடிகின்றது. சமுதாய மாற்றத்திலும் ஒரு வர்க்கத்திடமிருந்து இன்னொரு வர்க்கத்திற்கு மாறும் ஆட்சி மாற்றம் திடீரென நிகழ்கின்றது. இன்னொரு வர்க்கத்தின் ஆட்சியாக முழுமையடைதல் படிப்படியாகத்தான் நிகழ்கின்றது.

## படிமுறை வளர்ச்சியும் (Evolutionary Development) இயங்கியல் வளர்ச்சியும் (Dialectical Development)

அளவுமாற்றம் குணமாற்றமடையாமல், பாய்ச்சல் இல்லாமல், வெறும் பெருக்கத்தினால் மட்டுமே வளர்ச்சி ஏற்படுவதாகக் கருதுவது படிமுறை வளர்ச்சி எனப்படும். இதற்கு மாறாக அளவுமாற்றம் (பெருக்கம்) பாய்ச்சலில் குணமாற்றமடைவது இயங்கியல் வளர்ச்சி எனப்படும்.

## அளவுமாற்றத்திற்கும் குணமாற்றத்திற்கும் காரணங்கள்

ஒரு பொருளின் அளவுமாற்றத்திற்கு புறநிலைகளின் தூண்டுதல்கள் காரணம். உதாரணமாக ஒரு பொருளை வெப்பப்படுத்தும்போது (புறநிலைத் தூண்டுதல்) அதனுடைய வெப்பநிலை அதிகரிக்கின்றது. அளவுமாற்றம் ஏற்படுகின்றது. ஆனால் பொருட்களின் குணவேறுபாட்டை, குறிப்பிட்ட குணத்தை உடைய ஒரு பொருள் வேறுபட்ட குணத்தையுடைய மற்றொரு பொருளாக ஏன் மாறுகின்றது என்பதை, நீர் ஏன் நீராவியாக மாறவேண்டும் என்பதை இப்புறக்காரணங்கள் விளக்கமுடியாது. அப்பொருளுக்கும் மற்ற பொருள்களுக்கும் இடையிலான உறவுகள் (inter relationship) மற்ற பொருட்கள் அப்பொருட்களில் ஏற்படுத்தும் பாதிப்புகள் எல்லாம் துணைக் காரணங்களேயாகும். புறக்காரணங்களும் அகக்காரணங்கள் மூலம் தான் செயல்படுகின்றன. ஒரு பொருளினுடைய உள்ளமைப்பின் முரண்பட்ட கூறுகளின் இயக்கத்திலிருந்து தான் குணமாற்றத்தை புரிந்து கொள்ள முடியும். இதைப்புரிந்து கொள்வதற்கு முரண்பாடு பற்றிய விதி பயன்படுகின்றது.

## IV. முரண்பாடு பற்றிய விதி (Law of contradiction)

ஒவ்வொரு பொருளும் தன்னுள்ளே இரண்டு எதிர்மறைகளைக் கொண்டுள்ளது. இந்த எதிர்மறைகளுக் கிடையிலான உறவே முரண்பாடு எனப்படுகின்றது. முரண்பாட்டின் இரண்டு பக்கங்களாகிய இரண்டு கூறுகளே இரண்டு எதிர்மறைகளாகும்.

உதாரணம் :

| | | |
|---|---|---|
| இருள் | x | ஒளி |
| நன்மை | x | தீமை |
| பிறத்தல் | x | இறத்தல் |
| கூட்டல் | x | கழித்தல் |
| வினை | x | எதிர்வினை |
| முதலாளி | x | தொழிலாளி |
| இயங்கியல் | x | இயங்காவியல் |

**ஒற்றுமை :** இந்த எதிர்மறைகளில் ஒன்றை மற்றொன்றிலிருந்து பிரிக்கமுடியாது. இந்த எதிர்மறைக்களுக்கிடையிலான தொடர்பில்தான் அவற்றைப் புரிந்து கொள்ள முடியும். இரண்டும் அருகருகாமையில் இல்லை. ஒரு கூறு இருப்பது அதன் எதிர்மறை இருப்பதற்கு நிபந்தனையாகும். இருள் இன்றேல் ஒளி இல்லை; பிறத்தல் இன்றேல் இறத்தல் இல்லை. இதுவே எதிர்மறைகளின் ஒற்றுமை (Unity) எனப்படுகின்றது.

**போராட்டம் :** முரண்பட்ட கூறுகளின், அதாவது எதிர்மறைகளின் மற்றொரு பண்பு - அவை ஒன்றையொன்று தவிர்ப்பவையாகும். அதன் விளைவாக எதிர்மறைகள் ஒற்றுமையாக இருக்கும் அதே நேரத்தில் உராய்வு (friction) மோதல் (collision) போராட்டம் (Struggle) நிகழ்கின்றது.

**ஒற்றுமையும் போராட்டமும்**

ஒற்றுமை போராட்டம் இரண்டும் ஒரே நேரத்தில் எதிர்மறைக் கூறுகளுக்கிடையிலுள்ளது. இரண்டு எதிர்மறைக் கூறுகளுக்கிடையிலான ஒற்றுமையும் போராட்டமும் அவற்றிற்கிடையிலான உறவு அதாவது முரண்பாடு ஆகும். இரண்டு எதிர்மறைக் கூறுகளுக்கிடையிலான உறவாக முரண்பாடு இருப்பது தவிர முரண்பாட்டுக்கும் இரண்டு எதிர்மறைக் கூறுகள் உண்டு. அவைதான் ஒற்றுமையும் போராட்டமும்.

## பொருளின் வளர்ச்சி

எதிர்மறைகளுக்கிடையிலான போராட்டத்தின் விளைவாக முரண்பாடு தீர்க்கப்பட்டு குறிப்பிட்ட நிலைமைகளில் எதிர்மறைகளில் ஒன்று மற்றொன்றாகப் பாய்ச்சலில் மாறுவதால் புதிய முரண்பாடுகளைக் கொண்ட புதிய பொருள் உருவாகின்றது. அதாவது பொருள் வளர்ச்சியடைகின்றது. இதை விளக்கமாகப் பின்னால் காணலாம்.

## இயங்கியலின் சாரம்

"பொருட்களின் உட்சாரத்திற்கு உள்ளேயே அடங்கும் முரண்பாட்டைப் பற்றிய அறிவு என்பதே இயங்கியல் என்பதன் சரியான பொருளாகும்" என்று லெனின் 'மெய்யியலின் வரலாறுபற்றி ஹெகலினுடைய சொற்பொழிவின் சுருக்கம்' (Conspectus of Hegel's lectures on the philosophy) என்ற கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

"ஒரு பொருளை இரண்டாகப் பிளந்து அதனுடைய இரண்டு கூறுகளைப் புரிவதுதான் இயங்கியலின் சாரம்" என்று "இயங்கியில் பற்றிய கேள்வி பற்றி" என்ற கட்டுரையில் லெனின் கூறுகின்றார்.

இயங்கியல் உலகப் பார்வை முக்கியமாக நமக்குப் போதிப்பது என்ன?

பல்வேறு பொருட்களிலுள்ள எதிர்மறைகளின் இயக்கத்தை (movement) எப்படிக் கூர்ந்து கவனிப்பது (observe), எப்படிப் பகுத்தாய்வது (analyse), இந்த ஆய்வின் அடிப்படையில் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வழிமுறைகளை எப்படித் தேர்ந்தெடுப்பது என்பதாகும். எனவே பொருளிலுள்ள முரண்பாடு பற்றிய விதியை ஸ்தூலமான வழியில் (concrete way)புரிந்து கொள்வது நமக்கு அவசியமாகின்றது.

## முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மை (Universality of Contradiction)

### முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மை என்றால் என்ன?

(1) எல்லாப் பொருட்களின் வளர்ச்சிப் போக்கிலும் முரண்பாடு உள்ளது.

(2) ஒவ்வொரு பொருளின் வளர்ச்சிப் போக்கிலும் தொடக்கம் முதல் இறுதிவரை முரண்பாடு (எதிர்மறைகளின் இயக்கம்) உள்ளது.

"இயற்கை சமுதாயம், சிந்தனை ஆகியவற்றின் எல்லா நிகழ்வுகளிலும் இயக்கப் போக்குகளிலும் (Process) ஒன்றையொன்று தவிர்க்கக்கூடிய எதிரெதிரான போக்குகளுக்கு (tendencies) ,இடையிலான முரண்பாட்டை உணர்வது, கண்டுபிடிப்பதுதான்" எதிர்மறைகளின் ஒற்றுமை பற்றிய விதி என்று "இயங்கியல் பற்றிய கேள்வி பற்றி" என்ற கட்டுரையில் லெனின் குறிப்பிடுகின்றார். எல்லாப் பொருட்களிலும் அடங்கியுள்ள முரண்பட்ட கூறுகள் ஒன்றையொன்று சார்ந்திருத்தலும், அந்தக் கூறுகளுக்கிடையிலான

போராட்டமும் எல்லாப் பொருட்களின் வாழ்வையும் நிர்ணயிக்கின்றது. அவற்றின் வளர்ச்சியை முன்னோக்கித் தள்ளுகின்றன. முரண்பாட்டைக் கொண்டிராத பொருட்கள் கிடையாது. முரண்பாடின்றி எதுவும் இருக்கமுடியாது.

## இயக்கமும் முரண்பாடும்

"இயக்கமே ஒரு முரண்பாடுதான்" என்று 'டூரிங்குக்கு மறுப்பு' (Anti - Duhring) என்ற புத்தகத்தில் 'இயங்கியல் - அளவும் குணமும்' என்ற பகுதியில் ஏங்கல்ஸ் குறிப்பிடுகிறார். நாம் நடப்பது ஒரு எளிமையான இயக்கம். ஒரு காலை முன்னுக்கு வைக்கும்போது அடுத்தகால் பின்னுக்கு தங்குகின்றது. பின்கால் முன்னுக்குப் போகும் போது முன்கால் பின்னுக்கு தங்குகின்றது. இதுதான் நடப்பதிலுள்ள முரண்பாடு. எளிய இயக்கத்திற்கே முரண்பாடு அவசியம் என்றால் சிக்கலான இயக்கங்களுக்கு குறிப்பாக உயிரின் வளர்ச்சி பற்றிய இயக்கத்திற்கு முரண்பாட்டின் தேவை இன்னும் அதிகம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். உயிர் நிலைத்திருப்பதே உடம்பில் உயிர்மங்கள் தோன்றுவதும், அழிவதுமாகிய முரண்பாடு நிலைத்திருப்பதால்தான். இந்த முரண்பாடு இல்லாது போனால் உயிரும் முடிவுக்கு வந்துவிடும்.

## எங்கும் முரண்பாடு :

பொருட்களில்,

| | | |
|---|---|---|
| ஆண் | x | பெண் |
| பூ | x | காய் |
| பொருள் | x | ஆற்றல் |

பண்புகளில்,

| | | |
|---|---|---|
| கருப்பு | x | சிவப்பு |
| நன்மை | x | தீமை |
| முதுமை | x | இளமை |

செயல்பாடுகளில்,

| | | |
|---|---|---|
| எழுச்சி | x | வீழ்ச்சி |
| விரும்புதல் | x | வெறுத்தல் |
| கொடுத்தல் | x | வாங்குதல் |

இடத்தில்,

| | | |
|---|---|---|
| முன் | x | பின் |
| அங்கு | x | இங்கு |
| வடக்கு | x | தெற்கு |

காலத்தில்,

| | | |
|---|---|---|
| அன்று | x | இன்று |
| பகல் | x | இரவு |
| கோடைக்காலம் | x | குளிர்காலம் |

கணக்கியலில்,(Mathematics)

| | | |
|---|---|---|
| கூட்டல் | x | கழித்தல் |
| நேர்கோடு | x | வளைகோடு |
| எண் கணக்கியல் (arithmatic) | x | குறிக் கணக்கியல் ( algebra) |

வானவியலில்,

| | | |
|---|---|---|
| சூரியன் | x | கோள்கள் |
| ஈர்ப்பாற்றல் | x | எதிர்ப்பாற்றல் |

இயற்பியலில்,

| | | |
|---|---|---|
| வினை | x | எதிர்வினை |

எலக்ட்ரான் (electron) x புரோட்டான் (proton)

பிளவும் (fission) x ஒன்று சேர்தலும் (fusion)

வேதியியலில்,

சேர்க்கை (association) x பிரிகை (dissociation)

அணு (atom) x மூலக்கூறு (molecule)

தனிமங்கள்(elements) x கூட்டுப்பொருட்கள்(compounds)

உயிரியலில்,

| | | |
|---|---|---|
| வாழ்வு | x | சாவு |

முதுகெலும்புள்ளவை x முதுகெலும்பில்லாதவை

| | | |
|---|---|---|
| உள்மூச்சு | x | வெளிமூச்சு |

சமுதாயவியலில்,

| | | |
|---|---|---|
| ஆண்டை | x | அடிமை |
| முதலாளி | x | தொழிலாளி |

வர்க்கமற்ற சமுதாயம் x வர்க்க சமுதாயம்

அரசியலில்,

| | | |
|---|---|---|
| அரசு | x | குடி |
| உரிமை | x | கடமை |
| புரட்சி | x | எதிர்புரட்சி |

பொருளியலில்,

| | | |
|---|---|---|
| உழைப்பு | x | முதல் |
| விற்றல் | x | வாங்கல் |
| வருவாய் | x | செலவு |

போர் அறிவியலில்,

| | | |
|---|---|---|
| தற்காப்பு | x | தாக்குதல் |
| போர் | x | அமைதி |
| வெற்றி | x | தோல்வி |

மெய்யிலில்,

| | | |
|---|---|---|
| பொருள் முதலியல் | x | கருத்து முதலியல் |
| இயங்கியல் | x | இயங்காவியல் |
| அளவு | x | குணம் |

மேற்கண்டவை முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மை விளக்கும் சில குறிப்பான உதாரணங்களாகும்.

## கட்சியின் வாழ்வு :

ஒரு கட்சிக்குள் கூட முரண்பாடுகள் இல்லை என்றால் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குத் தத்துவப் போராட்டங்கள் (ideological struggles) நடத்தப்படவில்லை என்றால் கட்சியின் வாழ்வு முடிவுக்கு வந்துவிடும்.

## தொடக்கம் முதல் இறுதி வரை :

முன்னாள் சோவியத் ஒன்றியத்திலுள்ள ஒரு மெய்யியல் குழுவான டெபாரின் குழுவினர் (Deborin school) ஒரு இயக்கப் போக்கின் தொடக்கத்தில் முரண்பாடு தோன்றுவதில்லை; ஒரு கட்டத்திற்கு வளர்ச்சிபெற்ற பின் தான் முரண்பாடு தோன்றும் என்று கூறுகின்றனர். இதன்படி முரண்பாடு தோன்றும் கட்டம் வரையிலான வளர்ச்சிக்கு புறநிலைதான் காரணம்; அகநிலை காரணமல்ல என்றாகும். இது ஒரு இயங்காவியல் கொள்கை (Metaphysical theory) ஆகும். முதலாளி.

தொழிலாளி வர்க்கத்தின் தோற்றத்திலேயே முதலுக்கும், உழைப்புக்கும் முரண்பாடு தோன்றிவிடுகிறது. ஆனால், ஆரம்பத்தில் கூர்மை இருப்பதில்லை. போகப் போகக் கூர்மையடைகின்றது. இந்த முரண்பாடு வர்க்கப் போராட்டத்தில் தீர்க்கப்படும். பழைய முதலாளிய சமுதாயம் அழிந்து புதிய சோசலிச சமுதாயம் உருவானபின்கூட புதிய முரண்பாடுகளான ஆலைத் தொழிலாளிக்கும் விவசாயத் தொழிலாளிக்கும், மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்குமான முரண்பாடு தோன்றும்.

முரண்பாடு எங்கும் நிறைந்திருப்பது; முற்றுமையானது (absolute - சார்பில்லாதது); அது ஒவ்வொரு இயக்கப் போக்கிலும் தொடக்கம் முதல் இறுதிவரை நீடிக்கின்றது.

## முரண்பாட்டின் குறித்த தன்மை (The particularity of contradiction)

முரண்பாட்டின் குறித்த தன்மையையும் (Particularity and relativity of contradiction) சார்பியல் தன்மையையும் காண்போம்

## இயக்கத்தின் பிரிவுகளும் குறித்த முரண்பாடும்

ஒவ்வொரு முரண்பட்ட இயக்கமும் அதனுள் அதனுடைய குறிப்பிட்ட முரண்பாட்டை உள்ளடக்கியுள்ளது. இயந்திர இயக்கம், ஒலி, ஒளி, வெப்பம், மின்சாரம், அணுசேர்க்கை, அணுப்பிரிகை போன்ற பல இயக்க வடிவங்கள் இயற்கையில் உள்ளன. இந்த எல்லா இயக்கங்களும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதுடன் ஒன்று மற்றொன்றாக மாறுவதுடன் ஒன்றிலிருந்து மற்றொன்று சாரத்தில் வேறுபட்டதாகவும் இருக்கின்றன. ஒவ்வொரு இயக்கத்தின் தனித்தன்மையும் அதற்கேயுரிய முரண்பாட்டால் நிர்ணயிக்கப்படுகின்றது. இது சமுதாயத்திற்கும், சிந்தனைக்கும் கூடப் பொருந்தும்.

## அறிவியல் பிரிவுகளும் குறித்த முரண்பாடும்

ஆய்வுக்குரிய பொருளின் குறித்த முரண்பாட்டின் அடிப்படையிலேயே அறிவியல்கள் வகைப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக கணிதத்தில் நேர் எண்களும் எதிர் எண்களும், இயந்திரவியலில் வினையும் எதிர் வினையும், மின்சாரவியலில் நேர் மின்சாரமும் எதிர் மின்சாரமும், வேதியியலில் பிரிகையும் சேர்க்கையும், சமூக அறிவியலில் உற்பத்திச் சக்திகளும் உற்பத்தி உறவுகளும், இராணுவ அறிவியலில் தற்காப்பும் தாக்குதலும், மெய்யியலில் இயங்கியலும் இயங்காவியலும் குறித்த முரண்பாடுகள் ஆகும்.

## வேறுபட்ட முரண்பாடும் வேறுபட்ட தீர்வுமுறையும்

தன்மையில் வேறுபட்ட முரண்பாடுகள் தன்மையில் வேறுபட்ட

முறைகளால் தான் தீர்க்கப்படமுடியும். உதாரணமாக பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்குமான முரண்பாடு சோசலிசப் புரட்சியால் தீர்க்கப்படுகின்றது. பரந்துபட்ட மக்களுக்கும் தரகு முதலாளிய ஏகாதிபத்திய அரசுக்கும் இடையிலான முரண்பாடு ஜனநாயகப் புரட்சியில் தீர்க்கப்படுகின்றது.

## குறித்த முரண்பாடும் முரண்பாட்டின் கூறுகளும்

வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் ஒரு பொருளின் ஒவ்வொரு கட்டத்திலுமுள்ள (State) குறித்த முரண்பாடுகளை ஆய்வு செய்யும்போது அவற்றை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய்ப் பார்ப்பதுடன், ஒவ்வொரு முரண்பாட்டின் இரு கூறுகளின் இயக்கத்தையும் ஆய்வு செய்யவேண்டும். இல்லாவிடில் ஒரு போக்கின் சாரத்தைப் புரிந்து கொள்ளமுடியாது. எல்லா முரண்பாடுகளின் குறித்த தன்மையை ஆய்வு செய்யும்போது நாம் மேலோட்டமாகவோ, ஒரு தலைப்பட்சமாகவோ மானசீகமாகவோ ஆய்வு செய்யக்கூடாது. ''ஸ்தூலமான நிலைமைகள் பற்றிய ஸ்தூலமான பகுத்தாய்வு'' (concrete analysis of concrete condition) என்ற லெனினின் வார்த்தைகளை எப்போதும் மனத்தில் கொள்ளவேண்டும்.

## முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மையும் குறித்த தன்மையும்

பொருட்கள் பரந்திருப்பதாலும், அவைகள் வளர்ச்சி யடைதலுக்கு எல்லை இல்லாதிருப்பதாலும் ஒரு சூழ்நிலையில் எங்கும் நிறைந்த முரண்பாடு இன்னொரு சூழ்நிலையில் குறித்த தன்மையுடையதாகின்றது. இதற்கு மாறாக ஒரு சூழ்நிலையில் குறித்த தன்மையுடையது இன்னொரு சூழ்நிலையில் எங்கும் நிறைந்த தன்மையுடையதாகின்றது. முதலாளிய சமூக அமைப்பில் உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் உற்பத்திக் கருவிகளின் தனி உடைமைக்கும் உள்ள முரண்பாடு முதலாளியம் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் எல்லா நாடுகளுக்கும் பொதுவானது. முதலாளியத்தைப் பொறுத்தவரையில் இது முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மையாகும். ஆனால் இந்த முதலாளிய முரண்பாடு வர்க்க சமுதாயத்தின் பொது வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்திற்கு மாத்திரமே உரியதாகின்றது. வர்க்க சமுதாயம் முழுமையிலுமுள்ள, உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்குமுள்ள முரண்பாட்டில் முதலாளிய முரண்பாடு குறித்த தன்மையுடையதாகின்றது. எனவே ஒரு பொருளை ஆய்வு செய்யும்போது முரண்பாட்டின் குறித்த தன்மையையும் எங்கும் நிறைந்த தன்மையையும் கண்டு அவற்றிற்கிடையே உள்ள பிணைப்பை அறியவேண்டும்.

## பொதுத்தன்மையும் தனித்தன்மையும் (General character and Individual Character)

முரண்பாட்டின் எங்கும் நிறைந்த தன்மைக்கும் குறித்த தன்மைக்கும்

இடையிலான உறவு ஒரு பொருளின் பொதுத்தன்மைக்கும் தனித்தன்மைக்கும் இடையிலான உறவாகும். ஒரு பொருளின் தனித்தன்மையிலிருந்து அதன் பொதுத்தன்மையை ஆய்வு செய்வது; பொதுத்தன்மையிலிருந்து தனித்தன்மையை ஆய்வுசெய்வது ஆகிய இரண்டு முறைகள் உள்ளன. இவ்வாறு மனித அறிவு எப்போதும் சுற்று வட்டங்களாக இயங்குவதோடு ஒவ்வொரு வட்டமும் மனித அறிவை மேலும் ஒருபடி உயர்த்துகின்றது.

முரண்பாட்டின் குறித்த தன்மை காரணமாகத்தான் பொருளின் தனித்தன்மை உருவாகின்றது. எல்லாத் தனித் தன்மைகளும் நிபந்தனைக்குட்பட்டவை (conditional) ; தற்காலிகமானவை. எனவே தனித்தன்மை சார்புத்தன்மை (relative) கொண்டதும் ஆகும்.

## முதன்மை முரண்பாடும் ஒரு முரண்பாட்டின் முதன்மைக்கூறும் (Principal contradition and the principal aspect of a contradiction)

முரண்பாட்டின் குறித்த தன்மையைப் பொறுத்த மட்டிலும் இன்னும் இரண்டு விஷயங்களை தனியாகப் பிரித்து ஆராய வேண்டியுள்ளது; அவை முதன்மையான முரண்பாடும் - ஒரு முரண்பாட்டின் முதன்மையான கூறும் ஆகும்.

## முதன்மை முரண்பாட்டின் பங்கு

சிக்கலான பொருள் வளர்ச்சியடையும் போக்கில் பல முரண்பாடுகள் உள்ளன. அவைகளில் ஒன்று நிச்சயமாக முதன்மையான முரண்பாடாக இருக்கும். இந்த முரண்பாடு இருப்பதும் வளர்ச்சியடைவதும் மற்ற முரண்பாடுகள் இருப்பதையும் வளர்ச்சியடைதலையும் நிர்ணயிக்கின்றது. அல்லது பாதிக்கின்றது.

உதாரணமாக முதலாளிய சமுதாயத்தில் முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு முதன்மையான முரண்பாடாகும். மிச்ச சொச்ச நிலவுடைமை வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்குமான முரண்பாடு, விவசாய குட்டி முதலாளிக்கும் (Peasant petty bourgeoise) முதலாளிக்குமான முரண்பாடு, விவசாய குட்டி முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்குமான முரண்பாடு, விவசாய குட்டி முதலாளிகளுக்கிடையிலான முரண்பாடு, ஏகபோக முதலாளிகளுக்கும் (Monopoly capitalists) ஏகபோகமற்ற முதலாளிகளுக்குமான முரண்பாடு, முதலாளிய ஜனநாயகத்திற்கும் முதலாளிய பாசிசத்திற்குமான முரண்பாடு, முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலான முரண்பாடு, ஏகாதிபத்தியத்திற்கும் காலனி நாடுகளுக்குமிடையிலான முரண்பாடு இப்படிப்பட்ட இதர

முரண்பாடுகள் எல்லாம் முதன்மையான முரண்பாட்டினால் நிர்ணயிக்கப்படுகின்றன, அல்லது பாதிக்கப்படுகின்றன.

## முதன்மை முரண்பாடும் துணை முரண்பாடுகளும்

எந்த ஒரு இயக்கப் போக்கிலும் ஏராளமான முரண்பாடுகள் இருக்கின்றன. அவற்றில் முதன்மையான முரண்பாடு தலைமை தாங்கி நிர்ணயம் செய்யும் பாத்திரத்தை வகிக்கிறது. மற்ற முரண்பாடுகள் இரண்டாந்தரமான துணை நிலையை வகிக்கின்றன. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முரண்பாடுகள் உள்ள எந்த ஒரு சிக்கலான இயக்கப் போக்கை ஆய்வு செய்வதாக இருந்தாலும் அதிலுள்ள முதன்மையான முரண்பாட்டைக் கண்டறிய நாம் தீவிர முயற்சி செய்ய வேண்டும். முதன்மையான முரண்பாட்டைப் புரிந்து கொள்ளும் பட்சத்திலேயே எல்லா முரண்பாடுகளையும் தீர்த்துவிடமுடியும்.

## முரண்பாட்டின் முதன்மைக்கூறும் துணைக்கூறும்

ஒரு முரண்பாட்டின் இரு கூறுகளில் ஒன்று முதன்மையானதாகவும் மற்றது துணையாகவும் இருக்க வேண்டும். முரண்பாட்டில் தலைமைப் பாத்திரத்தை வகிப்பது முதன்மைக்கூறு ஆகும். ஒரு பொருளின் தன்மை முக்கியமாக ஆதிக்கம் செலுத்தும் முதன்மைக்கூறால் நிர்ணயிக்கப் படுகின்றது.

## கூறுகளின் இடமாற்றமும் பொருளின் குணமாற்றமும்

முதன்மைக்கூறும் துணைக்கூறும் பரஸ்பரம் இடம் மாற்றிக் கொள்கின்றன. அதாவது முதன்மைக்கூறு துணைக்கூறாகவும், துணைக்கூறு முதன்மைக்கூறாகவும் மாறுகின்றது. ஒரு பொருள் வளர்ச்சியடையும் போக்கில் ஒரு கூறு அடுத்த கூறுடன் நிகழ்த்தும் போராட்டத்தில் அதனுடைய ஆற்றல் கூடுவது குறைவதற்கேற்ப இடமாற்றம் நிகழ்கின்றது. புதிய கூறு வளர்ந்து முன்பு ஆதிக்கம் செலுத்திய பழைய கூறின்மேல் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்த கணத்திலேயே பழைய பொருள் புதிய பொருளாக பாய்ச்சலில் குணமாற்றம் அடைகின்றது. இந்தக் குணமாற்றம் சூழ்நிலைக்கேற்ப படிப்படியாக நிகழ்ந்து முழுமையடையும்போது பழையது முற்றிலும் அழிந்து முற்றிலும் புதிய பொருள் உருவாகின்றது.

உதாரணமாக பழைய நிலவுடைமை சகாப்தத்தில் ஆளப்படும் சக்தியாக இருந்த முதலாளியம் ஆதிக்க சக்தியாக மாறும்போது சமுதாயத்தின் தன்மை நிலவுடைமையிலிருந்து முதலாளியமாக மாறுகின்றது. புதிய முதலாளிய சகாப்தத்தில் நிலவுடைமை சக்திகள் பழைய ஆதிக்க நிலையிலிருந்து ஆளப்படும் நிலைக்கு மாறி படிப்படியாக அழிவுறுகின்றன.

## கூறுகளின் இடமாற்றத்திற்கு விதிவிலக்கு உண்டா?

சில முரண்பாடுகளைப் பொறுத்த மட்டில் கூறுகளின் இடமாற்றம் நடைபெறாது என்று சிலர் நினைக்கிறார்கள். உதாரணமாக உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவு களுக்குமான முரண்பாட்டில் உற்பத்தி சக்திகள்தான் முதன்மைக்கூறு. தத்துவத்திற்கும் (Theory) நடைமுறைக்கும் (pratice) ஆன முரண்பாட்டில் நடைமுறைதான் முதன்மைக் கூறு. பொருளியல் அடிப்படைக்கும் (Economic base) மேற்கட்டுமானத்திற்கும் (super structure) ஆன முரண்பாட்டில் பொருளியல் அடித்தளம்தான் முதன்மைக்கூறு. இங்கெல்லாம் முரண்பட்ட கூறுகளின் இடமாற்றம் நடைபெறவியலாது என்று சிலர் சொல்கின்றார்கள். இது யாந்திரீகப் பொருள் முதலியல் (Mechanical Materialism) கருத்தேயன்றி இயங்கியற் பொருள் முதலியல் கருத்தல்ல.

உற்பத்தி சக்திகளும், நடைமுறையும் பொருளாதார அடிப்படையுமே பொதுவாகப் பிரதானமான, தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கின்றன என்பது உண்மை. இதை மறுக்கும் எவரும் பொருள் முதலியலார் அல்ல, ஆனால் குறிப்பிட்ட நிலைமைகளில் உற்பத்தி உறவுகள், தத்துவம் மேற்கட்டமைப்புப் போன்ற கூறுகள் பிரதானமானவையாகவும், தீர்க்கமானவையாகவும் வெளிப்பாடடைகின்றன என்பதும் உண்மை.

உற்பத்தி உறவுகளில் மாற்றமின்றி உற்பத்தி சக்திகள் வளர்ச்சியடைய முடியாமல் இருக்கும்போது உற்பத்தி உறவுகளிலான மாற்றம் பிரதான தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கின்றது. "புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான இயக்கம் இருக்க முடியாது" என்று லெனின் கூறிய காலத்தில் புரட்சிகரத் தத்துவத்தை உருவாக்குவதும் அதற்காக வாதாடுவதும் பிரதான தீர்க்கமான பாத்திரத்தை வகித்தது. அரசியல், கலாச்சாரம் முதலிய மேற்கட்டமைப்பு, பொருளியல் அடிப்படையின் வளர்ச்சியைத் தடுக்கும்போது அரசியல், கலாச்சார மாற்றங்கள் பிரதானமானவையாகவும், தீர்க்கமானவையாகவும் ஆகின்றன.

இப்படிச் சொல்வது பொருள் முதலியலுக்கு எதிரானதா? இல்லை, ஏனென்றால் வரலாற்றின் பொதுவான வளர்ச்சியில் "பௌதிக அடிப்படை சிந்தனையைத் தீர்மானிக்கின்றது" (Material determines the mind) "சமூக வாழ்வு சமூக உணர்வைத் தீர்மானிக்கின்றது" (social being determines social conciousness) என்பதை அங்கீகரிக்கும் அதே வேளையில் சிந்தனை பௌதிக அடிப்படையிலும், சமூக உணர்வு சமூக வாழ்விலும், மேற்கட்டமைப்பு பொருளியல் அடிப்படையிலும் எதிர்வினை புரிவதையும் உண்மையில் அங்கீகரிக்க வேண்டும். இது பொருள் முதலியலுக்கு எதிரானதல்ல. மாறாக யாந்திரீகப் பொருள் முதலியலைத் தடுத்து இயங்கியற் பொருள் முதலியலை உறுதியாக உயர்த்திப் பிடிப்பதாகும்.

## முரண்பாட்டின் கூறுகளுக்கிடையிலான ஒத்த தன்மையும் போராட்டமும் (The ideatity and struggle of the aspects of a contradiction)

**ஒத்த தன்மை இருக்க முடியுமா?** ஒவ்வொரு இயக்க போக்கிலும் முரண்பட்ட கூறுகள் ஒன்றையொன்று தவிர்க்கின்றன, எதிர்க்கின்றன, போராடுகின்றன. இதற்கு விதிவிலக்கு இல்லை. எளிமையான இயக்கப் போக்கில் ஒரு சோடி எதிர்மறையும், சிக்கலான இயக்கப் போக்கில் ஒன்றுக்கு மேற்பட்டவையும் உள்ளன. இது இப்படி இருக்கும்போது ஒற்றுமையோ ஒத்த தன்மையோ சற்றும் இல்லை என்பதுதானே அர்த்தம். பின் ஒற்றுமையையும் ஒத்த தன்மையையும் பற்றிப் பேசுவது எவ்வாறு?

## ஒத்த தன்மையின் பொருள்

(1) உண்மையில் முரண்பாட்டின் எந்தக்கூறும் தனித்திருக்க முடியாது. தன்னுடைய எதிர்மறை இல்லையென்றால் ஒவ்வொரு கூறும் தான் வாழ்வதற்குரிய சூழ்நிலையையே இழந்துவிடுகின்றது. உதாரணமாக வாழ்வின்றேல் சாவில்லை; மேல் இன்றேல் கீழ் இல்லை முதலாளி இல்லாமல் தொழிலாளி இல்லை. ஒருபுறம் முரண்பாட்டின் கூறுகள் ஒன்றையொன்று எதிர்க்கின்றன. மறுபுறம் அவை ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டும், ஒன்றில் ஒன்று ஊடுருவியும், பரந்தும், ஒன்றையொன்று சார்ந்தும் இருக்கின்றன. ஒவ்வொரு கூறும் அதன் எதிர்மறை இருப்பதற்கு நிபந்தனையாகின்றது. எனவே அவை இரண்டும் ஒரு பொருளில் சகவாழ்வு நடத்துகின்றன. இதுதான் ஒத்த தன்மையின் முதல்பொருள் ஆகும்.

(2) குறிப்பிட்ட நிலைமைகளில், ஒரு பொருளில் அடங்கியுள்ள முரண்பாட்டின் ஒவ்வொரு கூறும் அதன் எதிர்மறையாக மாறுகின்றது. எதிர்மறையின் இடத்துக்கு மாறுகின்றது. ஒன்று மற்றொன்றிறாக மாறுதல்தான் ஒத்த தன்மையின் முக்கியமான பொருள் ஆகும்.

உதாரணமாக ஒரு காலத்தில் ஆளப்படும் வர்க்கமாக இருந்த பாட்டாளி வர்க்கம் புரட்சிக்குப்பின் ஆளும் வர்க்கமாக மாறியது. ஆளும் வர்க்கமாக இருந்த முதலாளி வர்க்கம் ஆளப்படும் வர்க்கமாக மாறியது. தன்னுடைய இடத்தைத் தன் எதிர்மறையின் இடத்திற்கு மாற்றிக் கொண்டது. ஒன்று மற்றொன்றாக மாறக்கூடியது. இதுதான் மெய்யியலில் ஒத்த தன்மை எனப்படுகின்றது.

## ஒத்த தன்மைக்கான நிபந்தனை

எதிர்மறைகள் ஒன்று மற்றொன்றாக மாறுதல் சில தேவையான குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டுமே நிகழமுடியும். ரஷ்யாவில் 1917 பிப்ரவரியில் நடந்த முதலாளிய ஜனநாயகப் புரட்சி அக்டோபரில் பாட்டாளி

வர்க்க சோசலிசப் புரட்சிக்கு இட்டுச் சென்றது. ஆனால் பிரான்சில் நடந்த முதலாளியப் புரட்சி சோசலிசப் புரட்சிக்கு மாற்றமடையாமல் 1871ல் எழுந்த பாரிஸ் கம்யூன் (Paris commune) தோல்வியுற்றது. சீனாவில் 1949ல் வெற்றி பெற்ற புதிய ஜனநாயகப் புரட்சி முதலாளியக் கட்டத்தை தவிர்த்து சோசலிசக் கட்டத்தை அடைய முடியும் என்று மாவோ கூறினார். ஆனால் இன்று சீனாவில் முதலாளியம் வலுப்பெற்றுள்ளது. ரஷியாவில் 1917 அக்டோபரில் வெற்றி பெற்ற சோசலிசப் புரட்சி அதிகாரத்துவ முதலாளியமாக சீரழிந்து, வல்லரசுப் போட்டியில் ஆயுத உற்பத்திக்கு அழுத்தம் கொடுத்து, பொருளாதாரம் நொருங்கி, சோவியத்யூனியன் வெடித்துச் சிதறி மீண்டும் முதலாளியம் வலுப்பெற்றுள்ளது. அதை முதலாளியத்தின் வெற்றியாகவும் சோசலிசத்தின், மார்க்ஸியத்தின் தோல்வியாகவும் மார்க்ஸிய எதிரிகளும், முதலாளித்துவ ஏகாதிபத்திய அடிவருடிகளும் பிரச்சாரம் செய்கின்றனர். சோசலிசப் புரட்சிக்குப்பின் ஆளும் வர்க்கமாக இருந்த முதலாளி வர்க்கம் ஆளப்படும் வர்க்கமாக மாறியுள்ளதே தவிர அது உடனே அழிந்துவிடுவதில்லை. புரட்சிக்குப் பின்னும் தொடர்ச்சியான வர்க்கம் போராட்டத்தில், முதலாளியத்தின் கூறுகள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு சோசலிசம் உறுதிப்பட்டு வர்க்க முரண்பாடுகள் மறைந்து மனிதனுக்கும் இயற்கைக்குமான புதிய முரண்பாடு தோன்றிய பின்புதான் முதலாளிய மீட்சி சாத்தியமில்லை. சோசலிசப் புரட்சிக்குப்பின் வர்க்கங்கள் நீடிக்கும் வரை எதிர்மறைக் கூறுகளின் இடமாற்றம், முதலாளிய மீட்சி சாத்தியமே. ஏறத்தாழ உலக முழுமையும் ஆதிக்கம் செலுத்தும் இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில், தொலைதொடர்பு வளர்ச்சி மிகுந்த இன்றைய சூழலில். எதிர்மறைக் கூறுகளின் இடமாற்றத்திற்கான, முதலாளிய மீட்சிக்கான வாய்ப்பு மிகுதியாகவே உள்ளது. எனினும் முதலாளியமும் ஏகாதிபத்தியமும் மக்களை, காலனி நாடுகளை சுரண்டுவது, செல்வமும் வறுமையும் குவிமயமாவது தவிர்க்க இயலாததால் மக்களின் போராட்டம் தவிர்க்கவியலாது. புரட்சி தவிர்க்கவியலாதது. சமூக வளர்ச்சிப் போக்கில் சோசலிசத்தின் பின்னடைவு தற்காலிகமானதே. மேற்கண்ட நிகழ்வுகள் அனைத்தும் ஒரு இயக்கப் போக்கில், ஒன்றிற்கொன்று தொடர்புடைய எதிர்மறைக்கூறுகள், சில குறிப்பிட்ட சூழலில், ஒன்று மற்றொன்றாக மாறுகின்றது என்ற மார்க்ஸிய - லெனினிய - மாவோ கோட்பாட்டை செழுமைப்படுத்தவே செய்கின்றது.

## இயங்கியல் பற்றி லெனின்

"எதிர்மறைகள் எப்படி ஒத்த தன்மையுடையதாக இருக்கமுடியும் எப்படி அவை ஒத்த் தன்மையுடையதாக மாறுகின்றன. எந்த நிலைமைகளில்

அவை ஒன்று மற்றொன்றாக மாறி ஒத்த தன்மையுடையதாக இருக்கின்றன. ஏன் மனித சிந்தனை இந்த எதிர்மறைகளை உயிரற்றதாகவும், விறைத்துப் போனவையாகவும், பார்க்காமல் உயிருள்ளவை யாகவும், நிபந்தனைக்குட்பட்டவையாகவும், இயங்குபவை யாகவும், தாமாகவே ஒன்று மற்றொன்றாக மாறுபவையாகவும் உணரவேண்டும் என்பதை இயங்கியல் நமக்குப் போதிக்கின்றது'' என்று ஹெகலுடைய தருக்கவியல் பற்றிய அறிவியலின் சுருக்கம் (conspectus of Megel's of The Science Logic) என்ற கட்டுரையில் லெனின் கூறுகின்றார்.

## இயக்கத்தின் இரண்டு நிலைகள்

எல்லாப் பொருட்களின் இயக்கத்திற்கும் இரண்டு நிலைகள் உள்ளன. (1) சார்புடைய ஒய்வு நிலை (relative rest) (2) கண்கூடான மாறுதல் நிலை. (conspicuous change) முதல் நிலையில் அளவுமாற்றம் மட்டும் நிகழ்கின்றது. இதன் விளைவாக வெளித் தோற்றத்தில் பொருள் ஒத்த நிலையில் இருப்பதுபோல் தோன்றும். பொருளின் இந்த வெளித் தோற்றத்தின் மாறாத்தன்மை (constancy) சார்புடையது. பொருள் அதன் இயக்கத்தின் இரண்டாவது நிலையிலுள்ள போது, முதல் நிலையின் அளவுமாற்றம் ஏற்கனவே முடிவுற்று பொருள் அதன் பழைய நிலையிலிருந்து கலைய ஆரம்பிக்கின்றது. குணமாற்றம் நிகழ்கின்றது. கண்கூடான மாறுதல் நிலை தோன்றுகின்றது.

## அளவு மாற்ற நிலையின் தோற்றமும் குணமாற்ற நிலையின் தோற்றமும்

நாம் அன்றாட வாழ்வில் காணும் ஒற்றுமை (unity) ஒருமைப்பாடு (solidarity) சேர்க்கை (combination) இணக்கம்(harmony) சமன்பாட்டுநிலை (balance) தேக்கம்(stalemate) இக்கட்டு (dead lock) ஒய்வு (rest) மாறாத்தன்மை (constancy) சமநிலை (equilibrium) திடநிலை (solidity) கவர்ச்சி (attraction) முதலிய எல்லாம் அளவு மாற்ற நிலையிலுள்ள பொருட்களின் தோற்றங்களே. ஒற்றுமை கலைவது அதாவது ஒருமைப்பாடு, சேர்க்கை, இணக்கம், சமன்பாட்டு நிலை, தேக்கம், இக்கட்டு, ஒய்வு, மாறாத்தன்மை சமநிலை, திடநிலை, கவர்ச்சி முதலியவற்றின் அழிவும், எதிர்மறைகள் ஒன்று மற்றொன்றாக மாறுவதும் குணமாற்ற நிலையின் தோற்றங்கள்.

## சார்புடைய நிபந்தனைக்குட்பட்ட ஒத்த தன்மையும் சார்பிலா நிபந்தனையற்ற போராட்டமும்

இயக்கத்தின் முதல்நிலையில் அதாவது ஒற்றுமை நிலையிலும் போராட்டம் உள்ளது. ஒற்றுமை கலையும் இரண்டாவது நிலையிலும்

போராட்டம் உள்ளது. போராட்டம் இயக்கப் போக்கின் ஆரம்பம் முதல் இறுதிவரை உள்ளது. ஆனால் இரண்டாவது நிலையில்தான் முரண்பாடு தீர்க்கப்படுகிறது. எதிர்மறைகள், ஒன்று மற்றொன்று இருத்தலுக்கு நிபந்தனையாக இருந்து, ஒரு பொருளில் சகவாழ்வு நடத்தி, ஒன்று மற்றொன்றாகும் ஒத்த தன்மை சில குறிப்பிட்ட நிலைகளில்தான் நடைபெறும். எனவே ஒத்ததன்மை நிபந்தனைக்குட்பட்டது. பொருள் கலையும் போது ஒத்த தன்மையும் உடைவதால் ஒத்ததன்மை தற்காலிகமானது. அதாவது சார்புடையது, ஆனால் போராட்டம் நிபந்தனையற்றது, சார்பிலாதது.

உதாரணமாக வெப்பப்படுத்தப்படும் நீரை எடுத்துக் கொள்வோமானால் அதனுள் உள்ள எதிர்மறைக்கூறுகள், நீரின் மூலக்கூறுகளுக்கிடையிலான ஈர்ப்பு விசையும், விலக்கு விசையும் ஆகும். இக்கூறுகள் ஒன்றின் இருத்தல் மற்றொன்று இருத்தலுக்கு நிபந்தனையாக இருந்து நீரில் சகவாழ்வு நடத்துகின்றன. ஈர்ப்புவிசை முதன்மைக்கூறாக ஆதிக்கத் திலுள்ள போது நீர் நீராக இருக்கின்றது. இயக்கத்தின் முதல் நிலையில் புறநிலைத் தூண்டுதலால் (வெப்பப்படுத்தலால்) அளவுமாற்றம் (வெப்பநிலை அதிகரிப்பு) ஏற்படுகின்றது. இந்த நிலையில் நீர் ஒய்வு நிலையில் இருப்பது போலத் தோன்றும். ஈர்ப்பு விசைக்கும், விலக்கு விசைக்கும் இடையிலான போராட்டம், அளவு மாற்றநிலையான இயக்கத்தின் முதல் நிலையிலும் உண்டு. இயக்கத்தின் இரண்டாவது நிலையான மாறுதல் நிலையில் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்து ஆதிக்க நிலையிலிருந்த முதன்மைக்கூறான ஈர்ப்புவிசை துணைக்கூறாகவும், துணைக்கூறான விலக்குவிசை ஆதிக்கம் செலுத்தும் முதன்மைக் கூறாகவும் மாறுகின்றது. நீர் பாய்ச்சலில் குணமாற்றமடைந்து அதன் எதிர்மறையான நீராவியாக ஆரம்பிக்கின்றது. ஒற்றுமை கலைகின்றது. ஒன்று மற்றொன்று இருத்தலுக்கு நிபந்தனையாக இருந்து நீரில் சகவாழ்வு நடத்தும் இருகூறுகளில் (ஈர்ப்புவிசை, விலக்குவிசை) ஒன்று மற்றொன்றின் இடத்துக்கு மாறும் ஒத்ததன்மை சில குறிப்பிட்ட நிலைகளில் (மாறுநிலை வெப்பநிலையில்) மட்டும் நிகழ்வதால் ஒத்ததன்மை நிபந்தனைக்குட்பட்டது. தற்காலிகமானது. அதாவது சார்புடையது. போராட்டம் தொடக்கம் முதல் இறுதிவரை நடைபெறுகின்றது. பொருள் குணமாற்றம் அடைந்த பின்பும் புது முரண்பாடு தோன்றி புதிய எதிர்மறைகளுக்கிடையிலான போராட்டம் தொடர்ந்து நடைபெறும். எனவே போராட்டம் நிபந்தனைக்குட்பட்டதல்ல. முற்றுமையானது (சார்பிலாதது).

நிபந்தனைக்குட்பட்ட சார்புடைய ஒத்தத்தன்மை, நிபந்தனைக்குட்படாத முற்றுமையான (சார்பிலாத) போராட்டம் ஆகிய இரண்டின் சேர்க்கையே எல்லாப் பொருட்களிலும் எதிர்மறைகளின் இயக்கத்தை ஏற்படுத்துகின்றது.

ஒத்த தன்மையில் போராட்டம் உள்ளது. குறித்த தன்மையில் எங்கும் நிறைந்த தன்மை உள்ளது. தனித் தன்மையில் பொதுத்தன்மை உண்டு. லெனினை மேற்கோள் காட்டின் "சார்பு நிலையில் சார்பிலாத நிலையுண்டு." ஸ்டாலின் தவறு பற்றி மாவோ (தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் 5பக். 367)

**(1) பொருள்களுக்கிடையிலான தொடர்பும் பொருளின் முரண்பட்ட கூறுகளுக்கு இடையிலான தொடர்பும்**

சோவியத் கம்யூனிஸ்ட் (போல்ஷ்விக்) கட்சியின் வரலாறு என்ற நூலில் இயங்கியற் பொருள் முதலியலும் வரலாற்றுப் பொருள் முதலியலும் என்ற பகுதியில் மார்க்ஸிய இயங்கியலின் முதல் தன்மையாக ஒரு பொருளுக்கும் மற்றப் பொருள்களுக்கும் இடையிலான உள்ளிணைப்பு பற்றி ஸ்டாலின் பேசுகின்றார். ஏதோ காரணமின்றி அவை இணைக்கப்பட்டிருப்பதாக கூறும் ஸ்டாலின் ஒரு பொருளில் அடங்கியுள்ள இரு முரண்பட்ட கூறுகளின் உள்ளிணைப்பைப் பற்றிப் பேசவில்லை.

**(2) ஒத்த தன்மையும் போராட்டமும்**

மேலும் இயங்கியலின் நான்காவது தன்மையாக எல்லாப் பொருட்களிலுமுள்ள உள்முரண்பாட்டை மட்டும் பார்த்து எதிர்மறைகளுக்கிடையிலான போராட்டத்தை விளக்குகிறார். ஆனால் முரண்பட்ட கூறுகளில், ஒன்று இருத்தல் மற்றது இருத்தலுக்கு நிபந்தனையாக இருந்து, ஒன்று மற்றொன்றாக மாறுவதையும், ஒன்று மற்றொன்றின் இடத்துக்கு மாறுவதையும் அதாவது ஒத்த தன்மையை அவர் பார்க்கவில்லை.

முன்னாள் சோவியத் யூனியனில் தொகுக்கப்பட்ட "மெய்யியலின் சிறு அகராதி" (short dictionary of philosophy) யின் நான்காம் பதிப்பில் ஒத்த தன்மையை விளக்கும்போது ஸ்டாலினுடைய இந்தத் தவறு வெளிப்பட்டுள்ளது. "போருக்கும் (war) அமைதிக்கும் (peace) இடையில், முதலாளிக்கும் பாட்டாளிக்கும் இடையில், சாவுக்கும் வாழ்வுக்குமிடையில், மேலும் இவை போன்ற மற்ற நிகழ்வுகளுக்குமிடையில் ஒத்த தன்மை இருக்கவியலாது. ஏனென்றால் அவை அடிப்படையில் ஒன்றையொன்று தவிர்ப்பவை. ஒன்றுக்கொன்று எதிரானது" என்று கூறப்பட்டுள்ளது.

இதை வேறு வார்த்தைகளில் கூறுவது என்றால் மார்க்ஸியப்படி, அடிப்படையில் ஒன்றையொன்று எதிர்க்கும் நிகழ்வுகளுக்கிடையில் ஒத்த தன்மை இருக்கவியலாது. அ;வை ஒன்றையொன்று தவிர்க்க மட்டும் செய்கின்றன. அவை ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்படாதவை குறிப்பிட்ட நிலைகளில் ஒன்று மற்றொன்றாக மாறாதவை. இந்த விளக்கம் முற்றிலும் தவறானதாகும்.

## போரும் அமைதியும்

அவர்கள் கருத்துப்படி போர் என்றால் போரே. அமைதியென்றால் அமைதியே. இவை இரண்டும் ஒன்றை யொன்று தவிர்ப்பவை. ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்படாதவை. போரை அமைதியாக மாற்றவியலாது. அமைதியை போராக மாற்றவியலாது. ஜெர்மானிய போர் அறிவியலறிஞர் கிளாஸ்விஸை (clausewitz) மேற்கோள் காட்டி ''அரசும் புரட்சியும்'' என்ற நூலில் லெனின் கூறுவதாவது : ''அரசியலை மற்ற முறைகளில் தொடர்வதுதான் போர்'' அமைதி காலங்களில் நடக்கும் போராட்டங்கள் தான் அரசியல். இந்தப் போராட்டடங்களில் சில தனிப்பட்ட முறைகள் பயன்படுத்தப் படும்போது அது போர் ஆகின்றது. இதிலிருந்து தெரிவதென்ன? போரும் அமைதியும் (1) ஒன்றையொன்று தவிர்ப்பவை (2) சில குறிப்பிட்ட நிலைமைகளில் ஒன்று மற்றொன்றாக மாறுபவை. போரின் கரு அமைதி காலத்தில் உருவாகி வளரவில்லை என்றால் திடீரென்று போர் எப்படி வெடிக்கமுடியும். போர் காலத்தில் அமைதியின் கரு உருவாகி வளரவில்லை என்றால் அமைதி எப்படி திடீரென உருவாகமுடியும் ?

## பிறத்தலும் இறத்தலும்

பிறத்தலும் இறத்தலும் எல்லாக் காலத்திலும் ஒன்று மற்றொன்றாக மாறவில்லை என்றால் வாழ்வு ஏது ?

## முதலாளியும் பாட்டாளியும்

முதலாளியும் பாட்டாளியும் தங்கள் எதிர்மறைகளின் இடத்துக்கு மாறவில்லை என்றால் புரட்சி மூலம் பாட்டாளி ஆள்பவனாகவும் முதலாளி ஆளப்படுபவனாகவும் மாறுவது எவ்வாறு ?

ஸ்டாலின் எதிர்மறைகளுக்கிடையிலான ஒற்றுமைக்கும் போராட்டத்திற்கும் இடையேயுள்ள பிணைப்பைப் பார்க்கத் தவறினார்.

## முரண்பாட்டில் பகைத்தன்மையின் இடம் (The place of antagonism in contradiction)

எதிர்மறைகளுக்கிடையிலான போராட்டம் பற்றிய பிரச்சினையில் பகைத்தன்மை பற்றிய பிரச்சினையும் உள்ளது. பகைத்தன்மை என்பது எதிர்மறைகளுக்கிடையிலான போராட்டத்தின் ஒரு வடிவமேயன்றி ஒரே வடிவமல்ல.

வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடு வளர்ச்சியடைந்து ஒரு குறிப்பிட்ட கட்டத்தை (stage) அடைந்த பின்பே முரண்பாடு வெளிப்படையான பகைத்தன்மை வடிவத்தைப் பெற்று புரட்சி உருவாகின்றது.

வர்க்க சமுதாயத்தில் அமைதி போராக மாறுவதும், போர் அமைதியாக மாறுவதும் இப்படித்தான்.

## பகை முரண்பாடு பகையற்றதாவதும் பகையற்றது பகை முரண்பாடாவதும்

பொருட்கள் ஸ்தூலமாக வளர்ச்சியடைவதைப் பொறுத்து பகையற்ற சில தொடக்க முரண்பாடுகள் பகைத்தன்மை கொண்டதாக வளர்ச்சியடைகின்றன. குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் பகைத்தன்மை கொண்ட மற்ற சில முரண்பாடுகள் பகையற்றதாக வளர்ச்சியடைகின்றன. கட்சிக்குள் தவறு செய்யும் தோழர்களைத் திருத்த கட்சியானது ஒருபுறம் போராட்டமும் மறுபுறம் அவர்கள் திருந்துவதற்கு உதவியும், ஒத்துழைப்பும் கொடுக்கும்போது தோழர்கள் அவற்றைத் திருத்திக் கொள்வார்களேயானால் முரண்பாடு பகைத் தன்மையாக வளர்ச்சியடையாது. தவறு செய்தவர்கள் பிடிவாதமாகத் தொடர்ந்து செய்து அதை இன்னும் மோசமாக்கினால் முரண்பாடு பகைத்தன்மையடைய வாய்ப்புண்டு.

## பகைத்தன்மையும் முரண்பாடும்

"பகைத்தன்மையும் முரண்பாடும் ஒன்றல்ல. சோசலி சத்தில் முன்னது மறையும். பின்னது இருக்கும்" என்று புகாஸ்ரினுடைய "மாறுதல் காலத்து பொருளியல் பற்றிய கருத்துரைகள்" ( Remarks on N.S. Bukhasrin's Economics of the Transitional period) என்ற கட்டுரையில் லெனின் கூறுகின்றார். அதாவது எதிர்மறைகளுக்கிடையிலான போராட்டத்தில் பகைத்தன்மை ஒரு வடிவமேயன்றி ஒரே வடிவமல்ல. இதை நன்றாக மனத்தில் கொள்ளவேண்டும்.

## நிலையுறுத்தலும் நிலைமறுப்பும் (Affirmation and Negation)

பொருள் வளர்ச்சியடையும் போக்கில் பழையநிலை பழையநிலையிலேயே இருக்க முயற்சிக்கும் போக்கு நிலையுறுத்தல் ஆகும். பழைய நிலையிலிருந்து புதிய நிலை தோன்றும்போது பழைய நிலை மறுக்கப்படுகின்றது.

## நிலை மறுப்பின் ஆக்கப்பண்பு (Positive character of Negation)

பழையதில் புதியது உருவாவதற்கான நிலைமைகள் தோன்றி முதிர்ச்சியடைந்து பழையதை எதிர்த்துப் புதியது தோன்றுகின்றது. நிலைமறுப்பு ஒரு முன்னேறும் போக்காகும். பழையது பெறுமனே அழிக்கப்பட்டு விடவில்லை. புதிய கட்ட வளர்ச்சிக்கு நிலைமைகளை உருவாக்கிய பின்தான் பழையது அழிகின்றது.

நிலைமறுக்கப்பட்ட பழையநிலை, முன்னோக்கி வளர்ச்சியடையும் போக்கில் ஒரு கட்டமாகும் (Stage). பழையது நிலைமறுக்கப்பட்டாலும்,

அதனுள் ஏற்பட்ட முன்னேற்ற நிலை மறுக்கப்படவில்லை. அதற்கு மாறாக இந்த முன்னேற்றம் கடந்த காலச் சாதனைகளை உள்ளடக்கிப் புதிய கட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

உதாரணமாக முதலாளியம் சோசலிசமாக மாறுவதை எடுத்துக்கொள்வோம். முதலாளியம் முதலாளியமாகவே இருக்க முயலும்போக்கு நிலையுறுத்தலாகும். முதலாளியத்திலிருந்து சோசலிசம் உருவாவது முதலாளியத்தின் நிலை மறுத்தலாகும். ஆனால் சோசலிசம் உருவாகி வளர்ந்து வெற்றி பெறுவதற்கான நிலைகள் முதலாளியத்திலேயே பிறந்துவிட்டன. முதலாளியம் அழிக்கப்படும்போது அதன்கீழ் வளர்ச்சி பெற்ற உற்பத்தி சக்திகளும் (productive forces) கலாச்சாரமும் (culture) அழிக்கப்படுவதில்லை. அவை பாதுகாக்கப்பட்டு மேலும் வளர்ச்சி பெறுகின்றன. தாராளவாதிகள் (liberals) நிலைமறுத்தலின் ஆக்கக்கூறுகளைப் புரிவதில்லை. அவர்கள் வெளியிலிருந்து வந்த ஒன்று நிலைமறுத்தலை உருவாக்கு வதாகக் கருதுகின்றனர். முதலாளியத்திற்கு ஆபத்து உள்முரண்பாடுகளின் வளர்ச்சி காரணமாக ஏற்படுவதை அவர்கள் நம்பவில்லை. ஏதோ கிளர்ச்சிக்காரர்கள் அதை உருவாக்குவதாகக் கருதுகின்றனர்.

## V. நிலைமறுப்பின் நிலைமறுப்பு பற்றிய விதி (The Law of Negation of Negation)

சமுதாயம் புராதனப் பொதுவுடைமை (Primitive communism) சமுதாயத்திலிருந்து அடிமைச் சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம், முதலாளிய சமுதாயம், சோசலிச சமுதாயம் என்று (பின்னடைவுகளுக்குப் பின்னும்) படிப்படியாக வளர்ச்சி பெற்று மீண்டும் பொதுவுடைமை சமுதாயமாக மாறுகின்றது. ஒவ்வொரு சமுதாயமும் அதற்கு முந்திய சமுதாயத்திலிருந்து வளர்ச்சி பெற்று முந்திய சமுதாயத்தை நிலைமறுக்கின்றது. வர்க்கமற்ற புராதன பொதுவுடைமைச் சமுதாயத்தை வர்க்க சமுதாயம் (அடிமை, நிலவுடைமை, முதலாளிய சமுதாயம்) நிலை மறுக்கின்றது. வர்க்க சமுதாயம் நிலைமறுக்கப்பட்டு மீண்டும் வர்க்கமற்ற பொதுவுடைமை சமுதாயம் உருவாகின்றது. நிலைமறுப்பின் நிலைமறுப்பு காரணமாக மீண்டும் பொதுவுடைமை சமுதாயம் உருவானாலும்கூட இது வளர்ச்சியடைந்த பொதுவுடைமை சமுதாயம் ஆகும். புராதனப் பொதுவுடைமை சமுதாயம் பின்தங்கிய உற்பத்தி சக்திகளைக் கொண்டது. ஆனால் பொதுவுடைமை சமுதாயம் மிக முன்னேறிய உற்பத்தி சக்திகளைக் கொண்டது. நிலைமறுப்பின் நிலைமறுப்பு மூலம் பழைய நிலை மீண்டும் வருகின்றது. ஆனால் அதே பழைய நிலையல்ல, வளர்ச்சியடைந்த பழைய நிலை. வளர்ச்சி நேர்கோட்டில் நிகழ்வதல்ல. சுழலேணி (Spiral) முறையில் வளர்ச்சி நிகழ்கின்றது.

இதேபோல் புராதன இயற்கையான பொருள் முதலியல், கருத்து முதலியல் நிலைமறுக்கப்பட்டது. கருத்து முதலியலால் நிலை மறுக்கப்பட்டு மீண்டும் நவீன பொருள் முதலியல் தோன்றியுள்ளது. இந்த நவீன பொருள் முதலியல் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் நிகழ்ந்த அறிவியல், மெய்யியல் வளர்ச்சியை உள்ளடக்கி வளர்ச்சி பெற்றதாகும்.

## நிலையுறுத்தல், நிலைமறுப்பு, நிலைமறுப்பின் நிலை மறுப்பு

நிலையுறுத்தல், நிலைமறுப்பு, நிலைமறுப்பின் நிலைமறுப்பு என்பவை இயங்கியல் படிமுறை வளர்ச்சியை சுருங்கச் சொல்லி விளக்குபவையே. எனவே இந்த மூன்று வளர்ச்சிக் கட்டமும் உலகத்திலுள்ள எல்லாப் பொருட்களிலும் இயக்கப் போக்கிலும் இருக்கின்றனவா என்று தேடிக் கொண்டிருக்க லாகாது. ஏனெனில் சில சமயங்களில் வளர்ச்சியின் முதல் கட்டத்தையோ இரண்டாவது கட்டத்தையோ பார்ப்போம். எல்லாக் கட்டங்களையும் பார்க்க முடியாமல் போகலாம். காரணம்? அதன் படிமுறை வளர்ச்சி (Evolution) முழுமை யுறாமலே இருக்கலாம்.

## இயங்காவியலும் இயங்கியலும்

### இயங்காவியல்

1. இயற்கைப் பொருட்களும் அவற்றின் நிகழ்வுகளும் தற்செயலாகக் குவிந்து கிடக்கும் ஏதோ ஒரு குவியல். அவைகளுள் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லை. ஒவ்வொன்றும் மற்றவைகளிலிருந்து பிரிந்து இருக்கின்றது. ஒன்றை யொன்று சார்ந்து இராமல் தனித்திருக்கின்றன.

2. ஒவ்வொரு பொருளிலும் இயக்கப் போக்கிலும் ஒரே ஒரு கூறு மட்டும் உண்டு. உதாரண மாக போரில் போர் என்ற கூறு மட்டும் உண்டு.

3. இயற்கை இயங்கா நிலையில், தேங்கிய நிலையில்,

### இயங்கியல்

1. இயற்கைப் பொருட்களும் அவற்றின் நிகழ்வுகளும் முழுமைத் தன்மையுடையவை. ஒன்றுடன் ஒன்று உடலும் உயிரும்போல் பிணைக்கப் பட்டவை. ஒன்றை யொன்று சார்ந்தவை. ஒன்றின் தன்மை மற்றொன்றின் தன்மையை நிர்ணயிப்பவை.

2. ஒவ்வொரு பொருளியலும் இயக்கப் போக்கிலும் இரு எதிர் மறையான கூறுகள் உண்டு. உதாரணமாக போரில் போர், அமைதி என்ற இரண்டு கூறுகள் உண்டு.

3. இயற்கை இடையறாது இயங்கிக் கொண்டிருக்கிறது. மாறிக்

மாறாநிலையில் உள்ளது.

4. வளர்ச்சியின் போக்கை சாதாரணமாக வளர்ந்து கொண்டேயிருக்கும் ஒரு போக்காக கருதுகின்றது. ஒரு பொருளில் ஏற்படும் அளவுமாற்றம் குணமாற்றத்தை உருவாக்குவதில்லை.

5. வளர்ச்சிக்கு அகக் காரணத்தை (உள்முரண் பாட்டை) மறுக்கின்றது. புறக் காரணம்தான் வளர்ச்சிக்குக் காரணம்.

6. பொருளின் குணத்தில் ஏற்படும் மாறுதல்கள் படிப் படியாக நிகழ்கின்றன.

7. கீழ்நிலையிலிருந்து மேல் நிலைக்கு ஏற்படும் வளர்ச்சிப் போக்கு இணக்கத்துடன் வெளிப்படும் நிகழ்ச்சி யாகும்.

கொண்டிருக்கின்றது. தன்னை தானே புதுப்பித்துக் கொண்டிருக்கிறது. வளர்ந்து கொண்டிருக்கின்றது. மேலும் இயற்கையில் எப்பொழுதும் ஏதாவதொன்று நொறுங்கிச் சிதைந்து கொண்டும் அழிந்து கொண்டுமுள்ளது. எப்பொழுதும் ஏதாவது ஒன்று தோன்றி வளர்ந்து கொண்டே யிருக்கின்றது.

4. ஒரு பொருளின் அளவில் ஏற்படும் அற்பமான புலனுக்கெட்டாத மாறுதல்கள் அந்தப் பொருளின் பகிரங் கமான அடிப்படையான மாறுதல்களை, குணமாற்றங் களை உருவாக்குகின்றன. இதுதான் வளர்ச்சி.

5. அகக் காரணம் (உள்முரண்பாடு) தான் வளர்ச்சிக்கு அடிப்படை. புறக் காரணம் துணையானது தான்.

6. பொருளில் ஏற்படும் குணமாற்றம் திடீரென பாய்ச்சலில் ஏற்பட்டு படிப்படியாக முழுமை யடைகின்றது.

7. ஒன்றின் இருத்தல் மற்றது இருப்பதற்கு நிபந்தனை யாக இருந்து ஒரு பொருளில் சகவாழ்வு நடத்துகின்ற இரு எதிர்மறை களுக்கிடையிலான போராட் டத்தின் விளைவாக

ஒன்று மற்றொன்றாக மாறுதல், ஒன்றின் இடத்துக்கு மற் றொன்று மாறுதல் காரணமாக பாய்ச்சலில் வளர்ச்சி - குணமாற்றம் ஏற்படுகின்றது.

| | |
|---|---|
| 8. வளர்ச்சி படிப்படியாக நேர்கோட்டில் நடைபெறு கின்றது. | 8. வளர்ச்சி வட்டப் பாதையில் நிகழாமல் சுழலேணி முறையில் நிகழ்கின்றது. நிலைமறுப்பின் நிலைமறுப்பு காரணமாக வளர்ச்சி நடைபெறுகின்றது. |

## மார்க்ஸியமும் சமுதாயமும்

இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகியவற்றின் பொது விதிகளை நிர்ணயிக்கின்ற அறிவியலான மார்க்ஸிய மெய்யியலை ஆழமாக புரிந்து கொள்ளுதல் அதை சமுதாய நடைமுறைக்குப் பயன்படுத்த கற்றுக்கொள்ளுதல் இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில், ஏகாதிபத்தியக் கட்டமைவிற்கு எதிரான ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக, சமூக வளர்ச்சிக்காகப் போராடும் முன்னணிப் படையினருக்கு அவசியம், பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் தங்கள் ஆதிக்கத்தை நியாயப்படுத்த, சமூக மாற்றத்திற்கான வர்க்கப் போராட்டங்களை இயற்கைக்கு, நீதிக்குப் புறம்பான கலவரங்களாகச். சித்தரித்து கருத்து முதலியலை, இயங்காவியலைப் பிரச்சாரம் செய்தனர். ஆனால் இப்போது அறிவியல் ரீதியாக முன்னேறிய வர்க்கமான ஏகாதிபத்தியம் பிற்போக்கு பிரச்சாரத்துடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. சமூக வளர்ச்சியை தங்கள் நலனுக்காக தற்காலிகப் பின்னடைவுக்குள்ளாக்குவதற்கு மார்க்ஸிய மெய்யியல் அறிவையும் பயன்படுத்தி செயல்படுகின்றனர். மேலும் மார்க்ஸியத்தை, அறிவியலிலிருந்து பிரித்து புதிய மார்க்ஸியம், அமைப்பியல் கோட்பாடு, பின்நவீனத்துவம் போன்ற போர்வையில் ஏராளமான புத்தகங்களை கட்டுரைகளை வெளியிட்டு பிரச்சாரம் செய்து புரட்சியாளர்களைத் தடம் புரட்டுகின்றனர். புரட்சியாளர்களின் பணி சிக்கலாகியுள்ளது. இச்சூழலில் மார்க்ஸிய மெய்யியல் தெளிவு கூடுதலாகத் தேவைப்படுகின்றது.

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்:**


(1) A Brief course of Dialectical materialism - *V. Podosetnik & O. Yakhot*

(2) On Contradiction - *Mao Tse Tung*

(3) Dialectical Materialism - *Maurice Cornforth*

(4) Dialectical Materilism and Historical Materialism in History of CPSU - *J.V. Stalin*

(5) Selected works of Mao Tse Tung V0I. V - *Mao*

(6) மார்க்ஸிய மெஞ்ஞானம் - *ஜார்ஜ் பொலிட்ஸர்*

(7) மார்க்ஸிய இயங்கியல் - *குணா*

(8) Dialectics of Nature - *Engels*

(9) Anti Duhring - *Engels*


* * *

# தாமரைச் செல்வி பதிப்பகத்தின் பிற வெளியீடுகள்

## மூன்றா முலக இலக்கிய வரிசை

1. பொலிவியன் நாட்குறிப்பு - சே குவேரா ரூ.60/-
   தமிழாக்கம் : அமரந்தா
2. கடைசி உயிலும், கடைசி வாக்குமூலமும் ரூ.35/-
   (ரோக்டால்டன் - எல்ஸல்வடார்; சே குவேரா;
   ஏரியல் டோர்ப்மென் - சிலி; கவிதைகள்)
   தமிழாக்கம் : யமுனா ராஜேந்திரன்
3. நிழல்களின் உரையாடல் - மார்த்தா த்ராபா ரூ.50/-
   (அர்ஜண்டீனா - நாவல்; தமிழாக்கம் : அமரந்தா)

## நுண்கலைகள்

4. அரசியல் சினிமா - பதினாறு இயக்குநர்கள் ரூ.75/-
   -யமுனா ராஜேந்திரன்
5. ஆப்ரிக்க சினிமா - யமுனா ராஜேந்திரன் ரூ.35/-
6. மக்களுக்கான சினிமா - தொகுப்பு : திருநாவுக்கரசு ரூ.50/-
7. எரியும் வண்ணங்கள் - ஓவியர். புகழேந்தி ரூ.75/-
8. தமிழ் அழகியல் - இந்திரன் ரூ.35/-

## கவிதைகள்

9. சனங்களின் கதை - த. பழமலய் ரூ.30/-
10. செல்வி சிவரமணி கவிதைகள் ரூ.15/-
11. எரிந்து கொண்டிருக்கும் நேரம் ரூ.10/-
12. ஆறாவது பூதம் - ஆசு ரூ.20/-
13. வெட்கத்தைக் கேட்டால் என்ன தருவாய் ரூ.20/-
    -சங்கர்

## கதைகள்

14. தாவரங்களின் உரையாடல் - எஸ். ராமகிருஷ்ணன் ரூ.30/-
14. உயிர் தண்ணீர் - கண்மணி குணசேகரன் ரூ.35/-
15. காடன் மலை - மா. அரங்கநாதன் ரூ.20/-
16. சாதி பாத்தியம் - க.பா. அருகன் ரூ.20/-
17. தெலுங்கானா சொல்லும் கதைகள் ரூ.45/-
    (20 தெலுங்கு சிறுகதைகள் - தமிழாக்கம் : சாந்தாதத்)